Registered as a news paper.

பக்கங்கள்: பத்து

விலை: ரூபா 6.00

ஆசியாவின் நம்பர் 1 சீமேந்து
SLS 107 அங்கீகாரம் பெற்றது.
ISO 9002 தரம் பெற்றது.
BSS 12 - 1991 தரத்திற்கு அமைவானது.
இவை அனைத்தையும் கொண்ட உயர்தர சீமேந்து.
ரா ம் கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
சீமேந்து
ரா ம் கோ
(சி-884)

நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

மலர் : 01 திருவள்ளுவர் ஆண்டு: 2034 வைகாசி 17 ஆம் நாள், ஹிஜ்ரி 1425 ர.அவ்வல் 28 (31.05.2003) சனிக்கிழமை இதழ்: 239

# மக்கள் எழுச்சிப் பேரணி தொடர்பான கருத்துக் கணிப்பில் பல்கலை மாணவர்!

(யாழ்ப்பாணம்)

தமிழ் மக்களின் எண்ணங்களையும், விருப்பங்களையும் ஒரேகுரலில் எடுத்துச்சொல்லும் வகையில், விரைவில் நடைபெறவுள்ள மக்கள் எழுச்சிப் பேரணி தொடர்பாக, மக்களின் கருத்துக்களை - பல்கலைக்கழக மாணவர்கள் நேரில் சென்று அறியவுள்ளதாக, யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் விடுத்த அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பொதுமக்களிடமிருந்து பெறப்படும் கருத்துக்களை, மாலையில் பல்கலைக்கழகத்தில் ஒன்றுகூடும் மாணவர்கள், தமக்குள் உரையாடிச் சந்தேகங்களைத் தீர்ப்பதுடன், மக்களுக்கும் தெளிவுபடுத்தவுள்ளனர். இதில் எவரும் கலந்துகொள்ளலாம் எனவும், அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவ்வறிக்கையில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது -

மக்களின் அடிப்படை மனித உரிமைகளை மீறத்தக்க வகையில், எமது பிரதேசத்தில் குடிகொண்டுள்ள இராணுவம், எமது வீடுகள், தொழில் நிலங்களில் இருந்து வெளியேற வேண்டும் என, ஒருமித்த குரலில் உலகிற்கும், சிங்கள தேசத்திற்கும் உரத்துக் கூறுவதற்காக அணிதிரள்வோம். இதனூடாக, பேச்சுவார்த்தையிலிருந்து விலகுவதாகப் புலிகள் எடுத்த முடிவு - தன்னிச்சையானது என்றும், இராணுவம் தமிழ் மக்களது வீடுகளில் இருப்பதனை மக்கள் ஆட்சேபிக்கவில்லை என்றும், இராணுவம் யாழ்ப்பாணத்தில் குடிகொண்டிருப்பதையே மக்கள் விரும்புகிறார்கள் என்றும் மக்களது விருப்பத்துக்கு மாறாக, தம் இஷ்டப்படி (10 ஆம் பக்கம் பார்க்க)

# அரசின் புதிய யோசனை புலிகளால் நிராகரிப்பு!

### விண்ணாணம் விநாசியர்



அம்மையாருக்கு ஒரு பொதி, ஐயாவுக்கு ஒரு சபை எண்டாகிப் போச்சுது...!

## காரணத்தை விளக்கி பிரதமருக்கு பாலா கடிதம்

(கொழும்பு)

**வடக்கு - கிழக்கு புனர்வாழ்வு மற்றும் அபிவிருத்திக்காக, அரசினால் முன்வைக்கப்பட்ட புதிய திட்டங்களை விடுதலைப் புலிகள் நிராகரித்துள்ளனர். இது தொடர்பான நான்கு பக்கக் கடிதத்தை விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கம் - பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு நேற்று அனுப்பிவைத்துள்ளார்.**

**அரசு தனது புதிய யோசனையில் முன்வைத்துள்ள கட்டமைப்பில், விடுதலைப் புலிகளின் பங்கேற்புக் குறித்துத் தெளிவாக எதுவும் குறிப்பிடப்படவில்லை. புதிய கட்டமைப்பு அரசின் செயற்திறனற்ற அமைப்புகளுடன் இணைக்கப்படுவதனால் அதுவும் செயற்திறனற்றதாகவே இருக்கும் என, அன்ரன் பாலசிங்கம் தனது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.**

அக்கடிதத்தின் முழு விவரமும் வருமாறு -

நோர்வே அனுசரணையாளர்களூடாக, உங்கள் அரசாங்கம் சமர்ப்பித்த ஆலோசனைகளைக் கவனமாகவும், விரிவாகவும் ஆராய்ந்து எமது அமைப்பின் நிலையை விளக்குமாறு விடுதலைப் புலிகளின் தலைமை என்னைப் பணித்திருந்தது.

உங்கள் அரசின் ஆலோசனைகள் தொடர்பாக, எமது நிலைப்பாட்டை விளக்குவதற்கு முன்பாக இடைக்கால நிர்வாகத்தை வடக்கு - கிழக்கில் உருவாக்குமாறு, விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் கோருவதற்கு வைத்த - விரக்தியான காரணங்கள் பற்றி, நான், விதார் ஹெல்கிசன் ஊடாக அனுப்பிய கடிதம் தொடர்பாக உங்கள் கவனத்தை ஈர்க்க விரும்புகிறேன்.

(10 ஆம் பக்கம் பார்க்க)

## எனது காணியில் படையினர் திடீரென முகாமிடுகின்றனர்!

### கண்காணிப்புக்குழுவிடம் பொதுமகன் முறையீடு

'எனது சொந்தக் காணியில், படையினர் - கடந்த வியாழக்கிழமை, திடீரென இராணுவ உபகரணங்களைக் கொண்டுவந்து இறக்கி, முகாம் அமைக்கும் பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.'

- இவ்வாறு, பருத்தித்துறை - தும்பளை வீதியைச் சேர்ந்த சி.வைகுந்தநாதன் என்பவர், இலங்கைப் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவுக்கு அனுப்பிவைத்துள்ள புகார்க் கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் பிரகாரம், பொதுமக்களின் வாழ்விடங்களை விட்டுப் படையினர் வெளியேறிக்கொண்டிருக்கும் இந்தச் சூழ்நிலையில், எனது சொந்தக் காணியில் முகாம் அமைப்பது எந்தவகையில் நியாயமானது. எனது காணியில் படையினர் முகாம் அமைப்பதை நிறுத்தி, காணியை நான் பயன்படுத்த வழிசெய்யுமாறு வேண்டுகிறேன் எனவும் அக்கடிதத்தில் கேட்கப்பட்டுள்ளது.

இக்கடிதத்தின் பிரதி ஒன்று, மனிதஉரிமை ஆணைக்குழுவுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. (09)

**அரசு தனது புதிய யோசனையில் முன்வைத்துள்ள கட்டமைப்பில், விடுதலைப் புலிகளின் பங்கேற்புக் குறித்துத் தெளிவாக எதுவும் குறிப்பிடப்படவில்லை. புதிய கட்டமைப்பு அரசின் செயற்திறனற்ற அமைப்புகளுடன் இணைக்கப்படுவதனால் அதுவும் செயற்திறனற்றதாகவே இருக்கும் என, அன்ரன் பாலசிங்கம் தனது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.**

அக்கடிதத்தின் முழு விவரமும் வருமாறு -

நோர்வே அனுசரனையாளர்களூடாக, உங்கள் அரசாங்கம் சமர்ப்பித்த ஆலோசனைகளைக் கவனமாகவும், விரிவாகவும் ஆராய்ந்து எமது அமைப்பின் நிலையை விளக்குமாறு விடுதலைப் புலிகளின் தலைமை என்னைப் பணித்திருந்தது.

உங்கள் அரசின் ஆலோசனைகள் தொடர்பாக, எமது நிலைப்பாட்டை விளக்குவதற்கு முன்பாக இடைக்கால நிர்வாகத்தை வடக்கு - கிழக்கில் உருவாக்குமாறு, விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் கோருவதற்கு வைத்த - விரக்தியான காரணங்கள் பற்றி, நான், விதார் ஹெல்கிசன் ஊடாக அனுப்பிய கடிதம் தொடர்பாக உங்கள் கவனத்தை ஈர்க்க விரும்புகிறேன்.

(10 ஆம் பக்கம் பார்க்க)

... படையினர் - கடந்த வியாழக்கிழமை, திடீரென இராணுவ உபகரணங்களைக் கொண்டுவந்து இறக்கி, முகாம் அமைக்கும் பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.'

- இவ்வாறு, பருத்தித்துறை - தும்பளை வீதியைச் சேர்ந்த சி.வைகுந்தநாதன் என்பவர், இலங்கைப் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவுக்கு அனுப்பிவைத்துள்ள புகார்க் கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் பிரகாரம், பொதுமக்களின் வாழ்விடங்களை விட்டுப் படையினர் வெளியேறிக்கொண்டிருக்கும் இந்தச் சூழ்நிலையில், எனது சொந்தக் காணியில் முகாம் அமைப்பது எந்தவகையில் நியாயமானது. எனது காணியில் படையினர் முகாம் அமைப்பதை நிறுத்தி, காணியை நான் பயன்படுத்த வழிசெய்யுமாறு வேண்டுகிறேன் எனவும் அக்கடிதத்தில் கேட்கப்பட்டுள்ளது.

இக்கடிதத்தின் பிரதி ஒன்று, மனிதஉரிமை ஆணைக்குழுவுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. (09)

# மூதூரில் இரு பொலிஸார் புலிகளால் கைதாகினர்!

## இன்று விடுவிக்க நடவடிக்கை

திருகோணமலை மாவட்டத்தில் உள்ள மூதூர் காட்டுப்பகுதியில், விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்துக்குள், சீருடையுடன் நுழைந்த பொலிஸார் இருவரை விடுதலைப் புலிகள் கைதுசெய்துள்ளனர்.

நேற்றுமுன்தினம் நடைபெற்ற இச்சம்பவத்தின்போது, முன்னணிக் காவலரண்களையும் தாண்டி, இரு பொலிஸார் தமது கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் நுழைந்ததை அவதானித்த விடுதலைப் புலிகள், மேற்படி இரு பொலிஸாரையும் கைது செய்தனர்.

ஆனாலும், நல்லெண்ண நடவடிக்கையாக, கைதுசெய்யப்பட்ட இரு பொலிஸாரையும், இன்றைய தினம் விடுதலைப் புலிகள் விடுவிககவுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு முன்னிலையில்

# புலிகளின் வடமராட்சி அலுவலகத்தை சோதனையிட ராணுவத்தினர் முயற்சி!

வடமராட்சியிலுள்ள விடுதலைப் புலிகளின் அரசியற்துறைச் செயலகத்தினை, போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினரோடு, இராணுவத்தினரும, பொலிஸாரும் இணைந்து சோதனையிட முயற்சி செய்துள்ளனர்.

மேற்படி சோதனையிடும் முயற்சியை, விடுதலைப் புலிகளின் யாழ். மாவட்ட அரசியற்துறையினர் மிகக் கடுமையாகக் கண்டித்துள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது,

யாழ்.மாவட்ட யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுவினர் - வடமராட்சி அரசியற்துறை அலுவலகத்தில், நேற்றுக் காலை முக்கிய விடயம் தொடர்பாகப் பேசவிரும்புவதாக முதலில் தெரிவித்தனர்.

சக்திவாய்ந்த தொலைத் தொடர்பு சாதனத்தை அங்குள்ளோர் வைத்திருப்பதாகத் தமக்குத் தகவல் கிடைத்திருப்பதாகவும், அதனைத் தாம் பார்வையிடப்போவதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

ஆனால் - பொறுப்பாளர் வந்துகொண்டிருப்பதால் அவரின் அனுமதி பெற்ற பின்பே, உள்ளே சென்று பார்வையிட முடியும் என அங்கிருநத பணியாளர்கள் தெரிவித்தனர்.

(10 ஆம் பக்கம் பார்க்க)

# புதைத்த சிசுவின் சடலம் கைதடிச் சந்தியில் மீட்பு!

கைதடிச் சந்திப்பகுதியில், புதையுண்ட நிலையிலிருந்த சிசுவின் சடலம் ஒன்று நேற்று மாலை மீட்கப்பட்டது. சாவகச்சேரி மாவட்ட நீதிவானும், யாழ். போதனா வைத்தியசாலை சட்டவைத்திய அதிகாரியும், சாவகச்சேரி பொலிஸாரும் இணைந்து மேற்படி சிசுவின் சடலத்தை மீட்டெடுத்தனர்.

கடந்த ஐந்து நாள்களுக்கு முன்னர் பிறந்த குழந்தையை, இரகசியமான முறையில் கைதடி சந்திப் பகுதியிலுள்ள வீட்டு வளவின் அருகாமையிலுள்ள பற்றைக்குள், சுமார் ஒன்றரையடி (10 ஆம் பக்கம் பார்க்க)

## நெப்போலியனுக்கு நீதிமன்று பிடியாணை

பத்திரிகையாளர் நிமலராஜன் கொலை வழக்குத் தொடர்பான விசாரணை, நேற்றையதினம் யாழ். நீதிமன்றில் எடுத்துக்கொள்ளப்பட்டது.

இறந்தவரின் சார்பில், சட்டத்தரணி வசந்தா ஆஜராகியிருந்தார். சந்தேக நபரான நெப்போலியன் இவ்வழக்கில் ஆஜராகவில்லை என்பதால், அவருக்கு எதிராக, நீதிமன்று பிடியாணை பிறப்பித்தது. (ரா,சு)

# நோர்வே பிரதமரின் கருத்தை கண்டிக்க ஜனாதிபதி முடிவு!

(கொழும்பு)

அண்மையில், நோர்வே பிரதமர் பொண்டவிக் - ஜப்பானில் வைத்து, ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா குறித்துத் தெரிவித்த கருத்துக்கு, ஜனாதிபதி கடும் கண்டனக் கடிதம் ஒன்றை நோர்வேப் பிரதமருக்கு அனுப்பிவைக்கவுள்ளதாக, ஜனாதிபதி அலுவலகம் தெரிவிக்கின்றது.

ரோக்கியோவில் உத்தியோக பூர்வ விஜயத்தை மேற்கொண்டிருந்த சமயம், நோர்வேப் பிரதமர் பொண்டவிக், ரொய்ட்டர் செய்தி

(10 ஆம் பக்கம் பார்க்க)

# நயினாதீவு உற்சவத்துக்கு மேலதிக படகு, பஸ் சேவை

## யாழ். செயலகக் கூட்டத்தில் முடிவு

(யாழ்ப்பாணம்)

அடுத்தமாதம் 29 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள நயினாதீவு உற்சவத்தை முன்னிட்டு, பொதுமக்கள் பயணிப்பதற்கான விரிவான ஏற்பாடுகள் செய்யப்படவுள்ளன.

இது தொடர்பான கலந்துரையாடலொன்று - நேற்றுக்காலை யாழ். செயலகத்தில் நடைபெற்றது. மேலதிக அரசாங்க அதிபர் பத்தினியம்மா திலகநாயகம்போல் தலைமையில் இடம்பெற்ற இக்கூட்டத்தில் - உதவி அரசாங்க அதிபர்கள், மின்சாரசபை அதிகாரிகள், இராணுவத்தினர், கடற்படையினர், மாநகர ஆணையாளர் உட்படப் பலர் கலந்து கொண்டனர்.

இதன்படி - பயணிகளின் போக்குவரத்துக்காக குறிகாட்டுவான் துறைமுகத்திலிருந்து, தினமும் 16 படகுச் சேவைகள் நடத்துவதெனவும் - அனலைதீவு, நெடுந்தீவு, குறிகாட்டுவான் துறைமுகத்திலிருந்து கடற்போக்குவரத்துக்குப் படகுகள் உதவுமெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. யாழ்பஸ நிலையத்திலிருந்து குடிதண்ணீர் ஏற்பாட்டை யாழ்.மாநகர சபையினரும், அல்லைப்பிட்டியில் - இராணுவமும், கடற்படையினரும் இணைந்து செய்யவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.திருவிழாவின் இறுதிநாட்களில் போக்குவரத்துச்சபையின் 40 பஸ்வண்டிகளை சேவையில் ஈடுபடுத்துவதெனவும் கூறப்பட்டுள்ளது.

அதேவேளை, நயினாதீவு இறங்கு துறைமுகத்தை ஆழமாக்கி திருத்தும் பணியும் நடைபெறவுள்ளது குறிப்பிடத்தக்கது.

(57,ரா,சு)

## நாடும் நடப்பும்






## பெயர் மாற்றம்

கதிர்காமத்தம்பி சிவசிரோன்மணி தம்பதிகளின் ஆறாவது புத்திரனாக 29.01.1976 இல் பருத்தித்துறை அரசினர் ஆதாரவைத்தியசாலையில் பிறந்த எனக்கு பெற்றோரால் சூட்டப்பட்ட **கந்தவப்பாதம்** என்ற பெயரினை இன்றுமுதல் **கபிலன்** எனப் பெயர் மாற்றம் செய்துள்ளேன் என இத்தால் சகலருக்கும் அறியத்தருகின்றேன்.

*"சின்னாலடி",*
*அல்வாய் மத்தி, அல்வாய்.* (சி-971) **க.கபிலன்.**

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணில் 21 - 12 - 1924



விண்ணில் 10 - 06 - 2002

அமரர்

**அப்பாக்குட்டி குமாரசிங்கம்**

**(சித்தி விநாயகர் வீதி, நாவற்குழி மேற்கு, கைதடி)**

எமது ஆருயிர்த் தெய்வமே
அன்பின் திருவுருவாய்
பண்பின் உறைவிடமாய்
வாழ்வின் வழிகாட்டியாய்
குடும்பத்தின் ஒளி விளக்கே
ஆண்டு ஒன்று மறைந்தாலும்
ஆறாது எம் துயரம்.

*யதூஷ் வீடியோ*
*அன் போட்டோ,*
*15/12 மாரியம்மன் வீதி,*
*திருநெல்வேலி.*
*T.P 0777 570295* (362)

என்றும் உங்கள் நினைவில்
வாழும்
மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.



# 'சங்ஸ்தா' கிண்ணத்துக்கான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டி!

## யாழ். வலயப் போட்டிகள் ஆரம்பமாயின

இலங்கை உதைபந்தாட்ட சம்மேளனமும், இலங்கைப் பாடசாலைகள் உதைபந்தாட்டச் சங்கமும் இணைந்து ஏற்பாடு செய்துள்ள, அகில இலங்கை ரீதியான 'சங்ஸ்தா' கிண்ணத்துக்கான 15 வயதுக்குட்பட்ட பாடசாலை அணிகளுக்கிடையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் - இம்முறை யாழ். மாவட்டத்தில் உள்ள 5 வலயங்களில் இருந்தும், பாடசாலை அணிகள் பங்குபற்றவுள்ளன.

இச்சுற்றுப் போட்டியின் முதல் ஆட்டங்கள் -வலயங்களுக்கிடையில் நடைபெற்று, அதில் முதலிரு இடங்களையும் பெறும் அணிகள், மாகாணரீதியான போட்டியில் இரண்டாம் சுற்றில் பங்குபற்றும்.

மாகாண ரீதியில் தகுதிபெறும் இரு அணிகள், மூன்றாம் சுற்றுக்குத் தகுதிபெற்று, அகில இலங்கை ரீதியான போட்டி நடைபெறவுள்ளது.

இச்சுற்றுப்போட்டியின் யாழ். வலய ரீதியான போட்டிகள் - யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மைதானத்திலும், யாழ்ப்பாணம் புனித சம்பத்திரிசியார் கல்லூரி மைதானத்திலும் நடைபெற்றுவருவதாக யாழ்ப்பாண வலய பாடசாலைகள் உதைபந்தாட்டச் சங்கத் தலைவர் கே.இராசதுரை தெரிவித்தார்.

### தொண்டராசிரியர் சந்திப்பு

யாழ்.மாவட்ட தொண்டராசிரியர்களின் அடுத்தகட்ட நடவடிக்கை தொடர்பாக ஆராயும் கலந்துரையாடலொன்று, இன்றுகாலை யாழ்.மத்திய கல்லூரியில் நடைபெறவுள்ளது.

### போதைப்பொருளுடன் ஒருவர் கைது

யாழ். முனீஸ்வரன் கோவிற் பகுதியில் கஞ்சா, கசிப்பு வைத்திருந்த நபரொருவரைப் பொலிஸார் நேற்றுக் கைது செய்துள்ளனர்.

இவர் 27 போத்தல் கசிப்பும், 7 கிராம் கஞ்சாவும் வைத்திருந்ததாகத் தெரியவருகின்றது. மேற்படி நபரை நீதிமன்றில் பொலிஸார் ஆஜர்ப்படுத்தியுள்ளனர்.

இவரிடம் - 15 ஆயிரம் ரூபா தண்டப்பணமாகவும், 10 ஆயிரம் ரூபா தவணைப்பணமாகவும் நீதிமன்றம் அறவிட்டது.



## தூண்டி இலக்கிய வட்டம் நடாத்தும்

## ஈழத்துத் தமிழ்க் கவிதை ஆய்வரங்கு

**இடம்:- நூலக கேட்போர் கூடம், யாழ்.பல்கலைக்கழகம்.**

**31.05.2003 சனிக்கிழமை காலை 9.00 மணி**

**அமர்வு -1**

*தலைமை:-* கலாநிதி. இ. முருகையன
*தமிழ்த்தாய் வாழ்த்து*
*மௌன அஞ்சலி*
*வரவேற்புப் பா*
*தொடக்கவுரை:-* திரு.தி.செல்வமனோகரன்
*தலைமையுரை*
☆ ஆய்வாளர்:- திரு.ஈ.குமரன்
*ஆய்வுக்குட்படும் கவிஞர்கள்:-*
பசுபதி
சு.வில்வரத்தினம்
ச. முகுந்தன்
*கலந்துரையாடல்*
☆ ஆய்வாளர்:- திரு. எஸ். கருணாகரன்
*ஆய்வுக்குட்படும் கவிஞர்கள்:-*
சேரன்
சோலைக்கிளி
ஔவை
ஆகர்ஷியா
*கலந்துரையாடல்*
☆ ஆய்வாளர்:- திரு.சு.வில்வரத்தினம்
*ஆய்வுக்குட்படும் கவிஞர்கள்:-*
நீலாவணன்
சோ.பத்மநாதன்
திருமாவளவன்
கி.பி.அரவிந்தன்
*கலந்துரையாடல்*
☆ கவிதை நாடகம்

**31.05.2003 சனிக்கிழமை மாலை 1.30 மண**

**அமர்வு - 2**

*தலைமை:-* திரு.சோ.பத்மநாதன்
☆ ஆய்வாளர்:- கலாநிதி.செ.யோகராசா
*ஆய்வுக்குட்படும் கவிஞர்கள:-*
எம்.ஏ.நுஃமான்
த.இராமலிங்கம்
நிலாந்தன்
சக்கரவர்த்தி
*கலந்துரையாடல்*
☆ ஆய்வாளர்:- திரு.எம்.நிலாந்தன்
*ஆய்வுக்குட்படும் கவிஞர்கள்:-*
சிவசேகரம்
பா.அகிலன்
அ.யேசுராசா
வானதி
*கலந்துரையாடல்*
☆ ஆய்வாளர்:- திரு.சண்முகம் சிவலிங்கம்
*ஆய்வுக்குட்படும் கவிஞர்கள்:-*
வ.ஐ.ச.ஜெயபாலன்
மு.பொன்னம்பலம்
ஓட்டமாவடி அரபாத்
*கலந்துரையாடல்*
☆ கவிதை நாடகம்
நன்றியுரை

**ஊடக அனுசரணை: நமது ஈழநாடு**

## பாடசாலை அதிபர்களே மாணவ மணிகளே

**உங்களுக்குத் தேவையான பாடசாலைப் புத்தகங்கள் எல்லாம் 10% - 20% வரையான கழிவுடன் அள்ளி வழங்கப்படும். தரமான பாடசாலை அலுவலக உள்ளீடுகள், எல்லா வகையான பாடசாலை நூல்களும், சரித்திரம், சாஸ்திரம், பிரபல எழுத்தாளர்களின் படைப்புகள், அறிவு வளர்க்கும் நூல்கள், சங்கீத உபகரணங்கள், விளையாட்டு உபகரணங்கள், அறிவு வளர்க்கும் விளையாட்டு உபகரணங்கள் (கணிதம் கற்க), டீன் உபகரணம் (ஆங்கில உச்சரிப்பு), ஸ்கிறபல்ஸ், மோனாபொலி, அத்துடன் மக்கினற, பெனல், பச்சை போட் வகைகள், எல்லா அளவுகளிலும் பயில் (File) அலுமாரி (கபினற்) இரும்பு அலுமாரி, பாடசாலை நூல் அலுமாரி, தொழில்சார் உபகரணங்கள், விவசாய ஆயுதங்கள் எல்லாவற்றையும் ஒரே கூரையின் கீழ்ப் பெற்றுக் கொள்ள இன்றே விஜயம் செய்யுங்கள். எங்களிடம் கொள்வனவு செய்யும் பொருட்கள் இலவசமாக வன்னிவரை பட்டுவாடா செய்யப்படும்.** (சி-970)

**ஆல் சிலோன் டிஸ்ரிபியூட்டர்ஸ்,**
**214, கே.கே.எஸ்.வீதி,**
**யாழ்ப்பாணம்.**
**T.P 021-2225542**

**THE ROYAL COLLEGE OF JAFFNA**

SPOKEN ENGLISH WITH GRAMMAR
N.VIGNESWARAN ARCHERY
**BLACK ROAD, CHANKANAI**
**426(302), K.K.S ROAD, JAFFNA.**
(சி-891)

**நிறைஞ்சனாஸ்** சங்கானை

இன்று முதல்
எம்.ஜி.ஆர்., நாகேஷ்,
ஜெயலலிதா, வீ.கே.ராமசாமி
**ரகசியப் பொலிஸ் -115**
காட்சி நேரம் 11.00, 2.45, 6.00 (பு.நே)
இன்றுமுதல்
**The Bock The scorpion king**
(சி-882)

**ராஜா** யாழ்ப்பாணம்.

*3 வது வாரம்*
இளைய தளபதி விஜய்,
மீராஜஸ்மின், கருணாஸ்
**புதிய கீதை**
தினசரி 10.30, 2.30, 6.30
சனி, ஞாயிறு 10.30, 2.30, 6.30, 9.30
(சி-883)



# முஸ்லிம்களின் காணிப்பிரச்சினைகள் வவுணதீவுச் சந்திப்பில் தீர்க்கப்பட்டது!



வவுணதீவு பிரதேச சபை செயலகச் சந்திப்பில் கலந்துகொண்ட முஸ்லிம் மற்றும் புலிகள் தரப்புப் பிரதிநிதிகளைப் படத்தில் காணலாம்.

(கொழும்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் தமிழீழ விடுதலைப்புலிகளும், முஸ்லிம் பிரதிநிதிகளும் நேற்றுமுன்தினம் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தினர்.

நேற்றுமுன்தினம் காலை 10 மணியளவில் வவுணதீவுச் சூனியப் பிரதேசத்திலுள்ள - பிரதேச செயலகக் கட்டடத்தில் ஆரம்பமான சந்திப்பு பி.ப. 1.15 மணியளவில் நிறைவுபெற்றது.

இந்தச் சந்திப்பில் விடுதலைப் புலிகள் சார்பில் மட்டு - அம்பாறை மாவட்ட சிறப்புத் தளபதி ரமேஷ், அரசியல் பொறுப்பாளர் இ.கௌசல்யன், பொருண்மியப் பொறுப்பாளர் நிசாம், நிதித்துறைப் பொறுப்பாளர் சுவி, நிர்வாக சேவைப் பொறுப்பாளர் ரெஜினோல்ட் ஆகியோரும் -

முஸ்லிம் பிரதிநிதிகளாக - பிரதியமைச்சர் பசீர் சேகுதாவூத், முகைதீன் ஆகியோருடன் மேலும் பலரும் கலந்துகொண்டனர்.

மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம், மட்டக்களப்பு மாவட்ட அபிவிருத்திக்குழுத் தலைவர் ராஜன் சத்தியமூர்த்தி ஆகியோரும் இந்தச் சந்திப்பில் கலந்துகொண்டது குறிப்பிடத்தக்கது.

இந்தச் சந்திப்பின் பின்னர், கருத்துத் தெரிவித்த மட்டு - அம்பாறை மாவட்ட சிறப்புத் தளபதி ரமேஷ் -

கடந்த மாதங்களில் நடைபெற்ற முஸ்லிம் பிரதிநிதிகளுடனான சந்திப்பில் - பின்தங்கிய நிலையிலிருந்த நிறைவேற்றப்படாத தீர்மானங்கள் தொடர்பாக ஆராய்ந்ததாகவும், தமிழர்களுடைய பகுதிகளிலுள்ள முஸ்லிம்களின் காணிகள் சம்பந்தமாக தீவிரகவனம் செலுத்தியதாகவும் தெரிவித்தார்.

அத்துடன், அப்படிப்பட்ட பிரச்சினைகள் இன்றைய சந்திப்பின்போது பெரும்பாலும் தீர்க்கப்பட்டுவிட்டதாகவும் தெரிவித்த அவர், இராணுவக்கட்டுப்பாட்டிலுள்ள தமிழர்களுடைய காணி விபரம் தொடர்பாகக் கதைக்கப்பட்டதாகவும், தேவையேற்படும் பட்சத்தில் சட்டரீதியான நடவடிக்கை எடுத்து, தமிழர்களுடைய காணியை மீளப்பெறுவதற்கு அரசாங்க அதிபரின் நேரடி உதவியினைப் பெறத் தீர்மானம் எடுத்திருப்பதாகவும் குறிப்பிட்டார்.

முஸ்லிம் பிரதிநிதிகளுக்குத் தலைமை தாங்கிய பசீர் சேகுதாவூத் கருத்துத் தெரிவிக்கையில்,

இத்தகைய சந்திப்புக்களின் பலன்களைத் தமிழ் - முஸ்லிம் மக்கள் விரைவில் அனுபவிக்க இருப்பதாகவும், முன்னைய சந்திப்புக்களைவிட பெரும்பாலான பிரச்சினைகளை இன்றைய சந்திப்பின்போது - தீர்த்துவைக்கக்கூடியதாக இருந்ததாகவும், அவை விரைவில் நடைமுறைப்படுத்தப்பட இருப்பதாகவும் குறிப்பிட்டார்.

முஸ்லிம்களின் காணிப்பிரச்சினை இன்றுடன் பெரும்பாலும் தீர்க்கப்பட்டிருப்பதாகத் தெரிவித்த அவர் - எதிர்வரும் ஜுலை 15 ஆம் திகதி கொக்கட்டிச்சோலையில் விடுதலைப் புலிகளுக்கும், முஸ்லிம் பிரதிநிதிகளுக்குமிடையிலான சந்திப்பு நடைபெறத் தீர்மானித்திருப்பதாகவும் தெரிவித்தார்.

முஸ்லிம் - தமிழ் உறவுகளை மேலும் மேம்படுத்துவதற்காக விரைவில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியான கரடியனாற்றுக்கு 30 பேர் கொண்ட முஸ்லிம் பிரதிநிதிகள் சென்று, சந்திப்பொன்றை நடத்தவிருப்பதாகவும், இதில் ஏறாவூர், காத்தான்குடி, ஓட்டமாவடியைச் சேர்ந்த பிரதிநிதிகளும் கலந்துகொள்வர் எனவும் பிரதியமைச்சர் மேலும் தெரிவித்தார்.

## பல்கலைகழக மாணவர்களிடையே மோதல்

(கொழும்பு)

கொழும்பு - ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தில் மாணவர் குழுக்களுக்கிடையில் இடம்பெற்ற மோதல்களில் இருபது மாணவர்கள் காயமடைந்தனர்.

கடந்த புதன்கிழமையன்று இச்சம்பவம் இடம்பெற்றது. ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழக மாணவர்கள் - விடுதி வசதிகளைச் செய்து தருமாறும், பாளி பௌத்தபீடத்தை மூடுவதற்கு எடுக்கப்பட்ட தீர்மானத்தை ரத்துச் செய்யக்கோரியும் வளாகத்துக்குள் ஆர்ப்பாட்டம் செய்தபோதே இந்த மோதல் ஏற்பட்டது.

இந்த மோதல்களில் இருபது பேர் காயமடைந்தனர். இவர்களில் ஆறுபேர் கடுங்காயங்களுடன் களுபோவில வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டவர்களில் ஒரு பௌத்தபிக்குவும், இரு மாணவிகளும் அடங்குவது குறிப்பிடத்தக்கது.

## மேற்குலக நாடுகள் கோரிக்கை

ஒன்றிணைந்த இலங்கைக்குள் சமஷ்டி முறையிலான தீர்வைக் காணச் சமாதானப் பேச்சுக்களைத் தொடருமாறு - இலங்கை அரசையும், விடுதலைப் புலிகளையும் மேற்குலக நாடுகள் சில கேட்டுள்ளன. பிரான்ஸ, ஜேர்மனி, நெதர்லாந்து, சுவீடன், சுவிற்சர்லாந்து, பிரிட்டன் ஆகிய நாடுகளின் தூதுவர்கள் இக்கோரிக்கைகளை இருதரப்பினர்களுக்கும் அனுப்பிவைத்துள்ளனர்.

## பெற்றோரிடம் ஒப்படைப்பு

விடுதலைப் புலிகள் அமைப்பில் தம்மை இணைந்துகொள்ள வந்த பதினாறு வயதிற்குட்பட்ட இரண்டு சிறுவர்களை அரசியற்துறையினர் பெற்றோரிடம் கையளித்துள்ளனர்.

விடுதலைப் புலிகளின் வவுனியா மாவட்ட கொள்கை முன்னெடுப்புப் பொறுப்பாளர் செ.சிறிநாத் - மேற்படி இரண்டு சிறுவர்களையும் நேற்றுமுன்தினம் காலை 10.30 மணிக்கு பெற்றோரிடம் ஒப்படைத்தார். (03)

# சமாதானத்தை நோக்கிய நகர்வுகள் மக்கள் முன்!

## உறுதியளிக்கிறார் ரவி கருணாநாயக்க

(கொழும்பு)

சமாதானத்தை நோக்கிய அரசாங்கத்தின் எந்த நடவடிக்கையும் மக்களின் முன்பாகக் கொண்டுவரப்படும் என்று, வர்த்தக நுகர்வோர் பாதுகாப்பு அமைச்சர் ரவி கருணாநாயக்க தெரிவித்தார்.

கொழும்பில் இடம்பெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே, அவர் இவ்வாறு குறிப்பிட்டார். அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது.

உலகமயப்படுத்தலுடன் நாம் ஒன்றிணைய வேண்டுமானால், நாட்டில் சமாதானம் ஏற்பட வேண்டியது அவசியமாகும். அத்துடன் - நீதி, கல்வி, பொருளாதாரக் கட்டமைப்புக்களிலும் மாற்றங்கள் கொண்டுவரப் படவேண்டியதும் அவசியமாகும் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

# வெள்ளம் பாதித்த பகுதிகளில் அதிக பாடசாலைகள் சேதம்!

அண்மையில் வெள்ளப்பெருக்கினால் பாதிக்கப்பட்ட ஆறு மாவட்டங்களிலும் உள்ள அதிகமான பாடசாலைகள் சேதமடைந்திருப்பதாக, கல்வியமைச்சர் கருணாசேன கொடித்துவக்குத் தெரிவித்தார்.

வெள்ளப்பெருக்கு ஏற்பட்ட இரத்தினபுரி, காலி, களுத்துறை, அம்பாந்தோட்டை, மாத்தறை ஆகிய மாவட்டங்களிலேயே பெரும்பாலான பாடசாலைகள் சேதமடைந்துள்ளன.

இந்தப் பாடசாலைகளில் கல்வி பயின்ற மாணவர்களின் பாடசாலைப் புத்தகங்கள் மற்றும் அனைத்துக் கல்வி உபகரணங்களும் வெள்ளத்தால் அழிவடைந்துள்ளன.

இதனால், பாதிக்கப்பட்ட மாணவர்களுக்காக இலவசப் பாடநூல்களை விநியோகிக்கக் கல்வி அமைச்சுத் தீர்மானித்துள்ளது. பாடசாலை அதிபர்கள் தமது மாணவர்களுக்குத் தேவையான நூல்கள் பற்றிய விபரங்களைக் கல்வி அமைச்சு ஊடாக நூல் வெளியீட்டுத் திணைக்களத்துக்கு அனுப்பி வைக்குமாறு கல்வி அமைச்சர் மேலும் கேட்டுள்ளார்.

# சிங்கள மொழி வினாத்தாள்கள் மோசடி; இரகசியப் பொலிஸ் விசாரணை தீவிரம்!

அண்மையில் நடைபெற்ற கல்விப் பொதுத் தராதரப் பத்திர உயர்தரப் பரீட்சையில், சிங்களமொழி மூல வினாத்தாள் முன்கூட்டியே வெளியானதா என்பது குறித்த விசாரணைகளை இரகசியப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

இநத மோசடி தொடர்பான தகவல்கள் வெளிவந்ததையடுத்து, விசாரணைகளை மேற்கொண்டு அறிக்கை சமர்ப்பிக்கும்படி இரகசியப் பொலிஸாரிடம் கல்வி அமைச்சர் கருணாசேன கொடித்துவக்கு கேட்டிருந்தார்.

இதையடுத்தே, விசாரணைகள் துரிதமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதுவரை இரண்டு பேராசிரியர்களை இரகசியப் பொலிஸார விசாரித்துள்ளதாகத் தெரியவருகிறது.

அத்துடன், தனியார் கல்வி நிறுவன ஆசிரியர் ஒருவரும் விசாரணைக்குட்படுத்தப்பட்டார். இவருக்குச் சொந்தமான அச்சகத்தைச் சோதனையிட்ட பொலிஸார், வினாத்தாள் உள்ளிட்ட பல ஆவணங்களைக கண்டுபிடித்தனர்.

மேலதிக விசாரணைகள் தொடர்ந்து இடம்பெறுவதாகவும், விரைவில் இது தொடர்பான அறிக்கை கல்வி அமைச்சருக்கு கையளிக்கப்படும் என்றும், இரகசியப் பொலிஸ் அதிகாரியொருவர் தெரிவித்தார்.

# அரசாங்கத்தைக் கண்டித்து கொழும்பில் ஆர்ப்பாட்டம்!

ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கத்தின் செயற்பாடுகளைக் கண்டித்து, கொழும்பு நகரில் ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்துவதற்கு சிறிலங்கா சுதந்திரக் கட்சி தீர்மானித்திருப்பதாகத் தெரியவருகிறது.

ஜனாதிபதி சந்திரிகாவுடனான அரசின் முரண்பட்டபோக்கு, இடைக்கால நிர்வாகம் அமைப்பு, சட்ட ஒழுங்கு சீர்குலைவு, 'சண்டி மல்லி' படுகொலை போன்ற குற்றச்சாட்டுக்களை அரசின்மீது முன்வைத்து இந்தப் போராட்டத்தை நடத்த, சிறிலங்கா சுதந்திரக் கட்சி தீர்மானித்துள்ளது.

இது தொடர்பாக ஆராயப்பட்ட கூட்டத்தில் - பொதுஜன ஐக்கிய முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர்களான அனுரா பண்டாரநாயக்க, மைத்திரிபால சிறிசேன, மங்கள சமரவீர மற்றும் அலவி மௌலானா ஆகியோர் கலந்துகொண்டனர்.

எதிர்வரும் மூன்றாம் திகதி இந்த ஆர்ப்பாட்டத்தை நடத்துவது எனவும, இக்கூட்டத்தில் முடிவுசெய்யப்பட்டது.

# படையினருக்கு அதிக அதிகாரங்கள் குற்றங்களைப் பெருக்கவே உதவியது!

## தடுப்பதற்கு அமைச்சரவையில் விசேட திட்டம்

குற்றச் செயல்களைத் தடுப்பதற்கான நீண்டகால, குறுகியகால அடிப்படையிலான விசேட திட்டங்கள் அமுல்படுத்தப்படவுள்ளது.

கடந்த புதன்கிழமை இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டததில் இந்த விசேட திட்டம் குறித்து ஆராயப்பட்டதாகத் தெரியவருகிறது.

பொலிஸ் மா அதிபரின் ஆலோசனையுடன், இந்தத் திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது. கடந்த இருபது வருடகாலமாக சட்டம் ஒழுங்கு நடவடிக்கைகள் சீர்குலைந்துள்ளன.

போராயுதங்களின் அதிகரித்த பயன்பாடு, படையிலிருந்து பெருமளவானோர் தப்பி ஓடியமை, அவசரகாலச் சட்டத்தின்கீழ் படையினர் மற்றும் பொலிஸாருக்கு அதிகளவு அதிகாரங்கள் வழங்கப்பட்டிருந்தமை போன்ற காரணங்களினாலேயே, சட்டம் ஒழுங்கு பெருமளவில் சீர்குலைந்ததாக அமைச்சரவைக் கூட்டத்தில் சுட்டிக்காட்டப்பட்டது. புதிய திட்டத்தை உருவாக்குவதற்கு முன்னர், உயர் மட்டக்குழு வொன்றை நியமித்து ஆலோசனை பெறுவதெனவும் முடிவு செய்யப்பட்டுள்ளது.

இந்தக் குழுவில் ஜனாதிபதியின் சார்பில் ஒரு பிரதிநிதியும், பொலிஸ் மா அதிபரும், ஓய்வுபெற்ற பொலிஸ் மா அதிபர்ருத்ரா ராஜசிங்கம் மற்றும் உள்துறை, நீதி அமைச்சுக்களின் சார்பில் தலா ஒவ்வொரு பிரதிநிதியும் இந்த உயர் மட்டக்குழுவில் இடம்பெறுவர்.

# ஐயாயிரம் தாதிகளை ஆட்சேர்க்கத் திட்டம்!

(கொழும்பு)

வைத்தியசாலைகளில் நிலவும் தாதிகள் பற்றாக்குறையை நிவர்த்தி செய்வதற்காக, ஐயாயிரம் தாதிகளை ஆட்சேர்ப்புச் செய்வதற்கு அரசாங்கம் திட்டமிட்டிருப்பதாகச் சுகாதார அமைசசர் பி.தயாரத்ன தெரிவித்தார்.

இதன் முதற்கட்டமாக 2200 தாதிகள் அடுத்தமாதம் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டு உடனடியாகப் பயிற்சிகள் ஆரம்பிக்கப்படவுள்ளன. அடுத்தகட்டமாக, 2800 தாதிகள் இந்த வருட இறுதியில் ஆட்சேர்ப்புச் செய்யப்படவுள்ளனர் எனவும் சுகாதார அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை, சுகாதார அமைச்சுக்கு இந்த வருடம் 21 பில்லியன் ரூபா அரசினால் ஒதுக்கப்பட்டுள்ளது.

# இலங்கை கடலில் மீன்பிடிக்க இந்திய மீனவருக்கு அனுமதி

## செப்ரெம்பரில் ஒப்பந்தம் கைச்சாத்து

(கொழும்பு)

இலங்கைக்கும், இந்தியாவுக்கும் இடையில் மீன்பிடித்தல் தொடர்பான ஒப்பந்தம் ஒன்று விரைவில் கைச்சாத்திடப்படவுள்ளது.

இரு நாடுகளும் பரஸ்பரம் தமது நாட்டு எல்லைக்குள் மீன்பிடிப்பதற்கு, மற்றநாட்டு மீனவர்களுக்கு அனுமதி வழங்குதல், பொதுவான கடல் எல்லைகளை வகுத்துக் கொள்ளுதல் போன்ற விடயங்களை உள்ளடக்கியதாக இந்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்படவுள்ளது.

அமைச்சர் மகிந்த விஜேசேகர இந்தியாவுக்குச் சென்று பேச்சுக்களை நடத்தியதன் விளைவாகவே, இந்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்படுவதற்கான சூழ்நிலை தோன்றியிருப்பதாக அதிகாரிகள் தெரிவித்தனர். இந்த ஒப்பந்தம் செப்ரெம்பர் மாதத்தில் கைச்சாத்திடப்படவுள்ளது.

இந்த ஒப்பந்தத்தின்படி, இலங்கை மீனவர்கள் அரேபியக் கடற்பகுதியிலும், இந்திய மீனவர்கள் இலங்கைக் கடற்பரப்பில் சில பகுதிகளிலும் மீன்பிடிக்க அனுமதிக்கப்படுவர் எனவும் தெரியவருகிறது.

## விசேட தேவைக்கு உட்பட்டோருக்கு

# புனர்வாழ்வு வழங்க பிரதேசமட்டக் குழு!

விசேட தேவைக்கு உட்பட்டவர்களுக்கு சமுதாய மட்டத்தில் வைத்து - புனர்வாழ்வு வழங்குவதற்கான பிரதேச மட்டக்குழு, வடமராட்சி கிழக்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவில் கடந்த செவ்வாய்க்கிழமை அமைக்கப்பட்டது.

உதவி அரசாங்க அதிபரைத் தலைவராகவும், சமூகசேவை உத்தியோகத்தரைச் செயலாளராகவும் கொண்டு, இக்குழுவில் கோட்டக் கல்வி அதிகாரி, பொதுச் சுகாதார சேவை அதிகாரிகள், பாடசாலை அதிபர்கள் மற்றும் பொது ஸ்தாபன பிரதிநிதிகள், தொண்டர் நிறுவன அதிகாரிகள் ஆகியோர் அங்கத்துவம் பெறுகின்றனர்.

சமூகசேவைகள் அமைச்சினால் முன்னெடுக்கப்படும் இத்திட்டத்திற்குப் பிரதேச மட்டக்குழுவானது, தனது ஒத்துழைப்பை வழங்கவுள்ளது. (112)



பாஷையூர் உதயதாரகை கலைமன்றத்தினால், கலைஞர்கள் கௌரவிப்பு நிகழ்வில் - கௌரவிக்கப்பட்ட கலைஞர்களை மேலுள்ள படத்தில் காணலாம். (119)



அகில உலக இந்து மாநாட்டையொட்டி நடத்தப்பட்ட கலாசார விழாவில், நல்லூர் பிரதேச செயலர் பிரிவில் முதலாம் இடத்தைப் பெற்ற - அரியாலை ஸ்ரீ அண்ணமார் ஆலயத்தில் நடைபெற்ற - விநோத உடைப்போட்டியின் ஒரு காட்சியைப் படத்தில் காணலாம். (55)

## அறநெறிப் பாடசாலை திறப்புவிழா

(தெல்லிப்பளை)

தோதரவை அம்மன் அறநெறிப் பாடசாலைத் திறப்புவிழா இன்று காலை 10 மணியளவில் நடைபெறவுள்ளது.

கணேசமூர்த்தி சர்மா தலைமையில் நடைபெறவுள்ள இவ்விழாவில், பிரதம விருந்தினராக - அமைச்சர் தி.மகேஸ்வரன் மற்றும் சிவத்தமிழ்ச்செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி ஆகியோர் கலந்துகொள்வர். கௌரவ விருந்தினராக மேலதிக அரசாங்க அதிபர் திலகநாயகம் போல் பங்குபற்றுவார். சிறப்பு விருந்தினர்களாக - சி.சிவமகாராஜா மற்றும் கலாசாலை உத்தியோகத்தர்கள் அருட்சத்தியன் ஆகியோரும் கலந்துகொள்ளவுள்ளனர்.

## பத்திரிகையாளர்கள் சங்கக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

வட - இலங்கை பத்திரிகையாளர் சங்க மாதாந்தக் கூட்டம் நாளை காலை 10.30 மணிக்கு பத்திரிகையாளர் சங்க பணிமனையில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்தில் சங்கத்தின் செயற்பாடுகள், எதிர்காலம், அடையாள அட்டை வழங்கல், பல்கலைக் கழக பத்திரிகையாளர் பயிற்சி நெறி, 'பத்திரிகையாளன்', 'துளிர்' சஞ்சிகைகள் வெளியீடு ஆகியன பற்றி ஆராயப்படவுள்ளது.

## கொடி தினம் பிரகடனம்

(யாழ்ப்பாணம்)

சர்வதேச புகைத்தல் எதிர்ப்பு தினமான இன்றைய தினத்தை இலங்கை சமுர்த்தி அதிகாரசபை பிரகடனப்படுத்தியுள்ளது.

கொடி விற்பனைமூலம் சேகரிக்கப்படுகின்ற நிதி - அந்தந்தப் பிரதேசத்தில் வறுமைக்கோட்டின் கீழ் வாழும் விதவைகள், அங்கவீனமுற்றவர்களுக்கு வீடுகட்டுவதற்கு உதவியாக வழங்கப்படவுள்ளதாக அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (ரா)


## வாழ்க வளமுடன்



HAPPY BIRTHDAY

### இரண்டாவது அகவையில்



பெயர் : த.பவித்திரா
முகவரி : செல்வபுரம், உரும்பிராய்.

### ஆறாவது அகவையில்

பெயர் : இ.கீர்த்தனன்
முகவரி : குருக்கள பகுதி. கரணவாய்.



பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்

### வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர்:------------------------------
முகவரி :------------------------------
பிறந்த ஆண்டு:------------------------------
கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.



------------------
பெற்றார் ஒப்பம்


# லொறி குடைசாய்ந்ததில் மேலிருந்து வீழ்ந்தவர் பலி!

(கிளிநொச்சி)

புளியங்குளத்தில் நடைபெற்ற வாகன விபத்தொன்றில் ஒருவர் மரணமடைந்ததுடன், மேலும் நான்கு பேர் காயமடைந்துள்ளனர்.

கிடுகு ஏற்றிய லொறி ஒன்றின் மேற்பகுதியில் அமர்ந்து பயணம் செய்த சமயம் குறிப்பிட்ட லொறி குடைசாய்ந்தது. அப்போது அதன் மேல் பயணஞ்செய்த ஐந்து பேரும் கீழே விழுந்தனர். இவர்களில் ஒருவர் மரணமடைந்தார். மற்றைய மூவரும் பலத்த காயமடைந்தனர். காயமடைந்தவர்கள் வவுனியா மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருக்கின்றனர்.

# உள்ளூராட்சி வாரத்தையொட்டி எழுச்சி விழாவுக்கு ஏற்பாடு!

யாழ். மாவட்ட உள்ளூராட்சி திணைக்களம், மாநகர, நகர, பிரதேச சபைகள் மற்றும் சனசமூக நிலையங்கள் இணைந்து நடாத்தும் உள்ளூராட்சி வாரம் தொடர்பான எழுச்சிவிழா ஜூலை மாதம் நடுப் பகுதியில் நடைபெறவுள்ளது.

குடாநாட்டிலுள்ள சனசமூக நிலையங்களின் செயற்பாடுகளை ஊக்குவித்து, அவற்றை மேம்பாடடையச் செய்யும் நோக்குடன் இந்த உள்ளூராட்சி வாரம் நடாத்தப்படவுள்ளது.

ஜூலை 14 ஆம் திகதி முதல் 21 ஆம் திகதிவரை நடைபெறவுள்ள இந்த எழுச்சி வாரத்தையொட்டி- குடாநாடு தழுவிய வகையில் போட்டிகள் நடாத்தப்படவுள்ளன. இப் போட்டியில் பங்குபற்ற விரும்பும் சனசமூக நிலையங்கள் ஜூன் மாதம் 10 ஆம் திகதிக்கு முன் சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தருக்கு விண்ணப்பிக்கவேண்டும்.

இந்த எழுச்சி வாரத்தையொட்டி இறுதி நிகழ்வாக - மலர் வெளியீடும், கண்காட்சி ஒன்றும் நடைபெறவுள்ளது.

இதற்கான சகல ஏற்பாடுகளையும் - யாழ். மாவட்ட உள்ளூராட்சித் திணைக்களமும், ஏனைய உள்ளூராட்சி சபைகளும் மேற்கொண்டு வருகின்றன. (ரா)

## லொறிக்குள் இருந்த

# சீமெந்து கலக்கும் இயந்திரம் சரிந்து இளைஞன் நசியுண்டு மரணமானார்

(யாழ்ப்பாணம்)

லொறியில் ஏற்றப்பட்டிருந்த சீமெந்து கலக்கும் இயந்திரம் சரிநது வீழ்ந்ததில், லொறிக்குள் இருந்த இளைஞர் ஒருவர் அதனுள் நசியுண்டு பரிதாபகரமாக உயிரிழந்த சம்பவம் - உடுவிலில் நேற்று இடம் பெற்றுள்ளது.

அச்செழுவைச் சேர்ந்த சந்திரன் சிறீதரன் (வயது -17) எனும் இளைஞனே இவ்வாறு பரிதாபகரமாக உயிரிழந்தவராவர்.

நேற்று முன்தினம் காலை 9 மணியளவில் கன்ரர் வாகனமொன்று சீமெந்து கலக்கும் இயந்திரத்தை ஏற்றிக் கொண்டு உடுவில் வீதியால் சென்றுகொண்டிருந்தது. உடுவில் மகளிர் கல்லூரிக்கு அண்மையிலுள்ள வீதிவளைவில் இவ்வாகனம் திரும்பிய சமயம், வாகனத்திலிருந்த சீமெந்து கலக்கும் இயந்திரம் திடீரெனச் சரிந்து விழுந்ததிலேயே கன்ரருக்குள் இருந்த இந்த இளைஞன் உயிரிழந்தார். (ரா,க)

# பூந்தோட்ட முகாம் மக்கள் முல்லை திரும்புகின்றனர்!

(வவுனியா)

வவுனியா பூந்தோட்டம் நலன்புரி நிலையத்தில் இதுவரை காலமும் தங்கியிருந்த நாற்பத்தியெட்டுக் குடும்பங்கள், சுயவிருப்பின் அடிப்படையில் - முல்லைத்தீவு மாவட்டத்தில் மீளக்குடியேற முல்லைத்தீவு அரச அதிபர் நடவடிக்கை எடுத்துள்ளார்.

1995 ஆம் ஆண்டுமுதல் பூந்தோட்ட நலன்புரி முகாமில் தங்கியிருந்த மக்கள், தமது சொந்த இடங்களில் மீளவும் குடியேறி, இயல்பு வாழ்க்கையை ஆரம்பிகக வசதியாகவே முல்லைத்தீவு மாவட்டத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டுள்ளனர். (03)

**கற்களை அகழாதே - கண்டபடி மண்வளத்தைச் சிதைக்காதே.**

# வார்த்தை விளையாட்டு - 35

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 ச | 2 | | 3 தி | | |
| | 4 க | | | | |
| | | | 5 | ரை | |
| | | 6 அ | | | |
| | 7 | | ம் | | 8 |
| | | | 9 | ல் | |

முழுப் பெயர் : ..........................................

கற்கும் பாடசாலை : ..........................................

கற்கும் தரம் : ..........................................

முகவரி : ..........................................

.............................. ..............................

கையொப்பம் திகதி

### இடமிருந்து வலம்

1. பெரிய கடற்பரப்பு.
4. பெறுமதி குறைந்த உலோகம்.
5. வேகம்.
6. அக்கம்பக்கம் / சுற்றம்.
7. காலில் அணியப்படுவது.
9. சமையலுக்கு உதவும் சரக்குப்பொருள்.



### மேலிருந்து கீழ்

1. சில்வு.
2. தொழிலாளியின் எதிர்ப்பதம்.
3. திரைகடலோடியும் இதைத் தேடு என்று சொல்வர்.
6. பிரதமரின் உத்தியோகபூர்வ மாளிகை.
8. நோவு.

## வார்ததை விளையாட்டு - 34 இன் சரியான விடைகள்

**இடமிருந்து வலம்**

1. ஆனந்தம்.
3. சதுரம்.
6. பிடரி.
7. பறவை.
8. அம்புலி.
11. சவாரி.



**மேலிருந்து கீழ்**

1. ஆசனம்.
2. தம்பி.
4. துயரம்.
5. அரிவை.
9. புறா.
10. வரி.

சிறுவர் அரங்கம் வார்த்தை விளையாட்டுப் போட்டியில் 15 வயதுக்குட்பட்ட எவரும் பங்குபற்றலாம்.

மேறகாணும் கூப்பனை நிரப்பி உங்கள் சுயவிபரங்களுடன் தபாலில்,



**நமது ஈழநாடு**
**சிறுவர் அரங்கம்**
267, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

என்ற முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.
உங்கள் பதில்கள் எமக்கு வந்து சேர வேண்டிய
இறுதி நாள்:- 04-06-2003
சரியான விடை எழுதிய மூவரை குலுக்கல் மூலம் தெரிவுசெய்து பரிசு வழங்கப்படும்.



## வார்த்தை விளையாட்டு - 34

இல் பங்குபற்றிச் சரியான விடை எழுதி, குலுக்கல் மூலம் பரிசு பெறத் தெரிவுசெய்யப்பட்ட அதிர்ஷ்டசாலிகள்.

*1 ஆம் பரிசு -*
செ.டனியா
கச்சாய் வீதி,
கொடிகாமம்.

*2 ஆம் பரிசு -*
ச.ஐங்கரன்
முதலாம் கட்டை,
கல்வயல்,
சாவகச்சேரி.

*3 ஆம் பரிசு -*
க.கிரிஸ்ரீனா வேர்ஜினி
கரவெட்டி வடக்கு,
கரவெட்டி.



*பரிசுகள் தபால்மூலம் விரைவில் உங்களை வந்தடையும்.*



# சிறுவர் அரங்கம்

## கரடியாரின் கரட்டுக்கு நேர்ந்த கதி

கரடியாரின் தோட்டத்தில் கரட் நன்கு விளைந்து இருந்தது. முயலாரின் கண்களைக் குத்தியது. ஆனால், கடந்த சில நாட்களாக முயலார் தமது போக்கிரித்தனத்தைக் கைவிட முடிவுசெய்து, நல்ல பிள்ளையாக நடந்து வந்தார். அதனால், கரடியாரின் தோட்டத்தில் களவாகக் கரட் கிண்டி எடுக்க அவர் விரும்பவில்லை. அவர் நேராகக் கரடியார் வீடு சென்றார். கரடியாருக்குக் காலை வந்தனம் கூறினார். “இன்று நல்ல நாள். இல்லையா?” என்று கரடியாரை வினாவினார்.

கரடியார் வெறுப்புடன் “உம்மில் விழிக்கும் நாள் எப்படி நல்ல நாளாக இருக்கமுடியும்?” என்று உறுமினார்.

முயலார் இதைக்கேட்டு முகம் சுழிக்கவில்லை. மாறாக, முகத்திலே அமைதியையே வெளிப் படுத்தினார். “கரடியாரே நீர் நினைப்பதுபோல, நான் இப்பொழுது போக்கிரி அல்ல, திருந்திவிட்டேன்” என்றார்.

இதைக் கேட்டு கரடியார் மனத்தில் எவ்வித மாற்றமும் ஏற்படவில்லை. “நீராவது திருந்துவதாவது, நீர் பிறவிப்போக்கிரி. கடைசி மட்டும் போக்கிரியாகவே இருப்பீர்” என்று கடுகடுப்புடன் கூறினார்.



முயாலார் அப்பொழுது தமது பணிவையோ, பொறுமையையோ கைவிடாது சொன்னார்; “கரடியாரே, நான் போக்கிரியாய் இருந்தால், உம்மைத் தேடி வந்திருக்கமாட்டேன். உம்முடைய கரட் தோட்டத்துக்கு நேரேபோய் எனக்கு வேண்டிய கரட்டைக் களவாடிச் சென்றிருப்பேன்” என்றார்.

“ஓகோ! என் கரட்டுக்கு அடி போடுகிறீரா” என்று கேட்டு விட்டுக் கரடியார் ஏளனமாகச் சிரித்தார்.

ஆங்கிலத்தில் - எனிற் பிளைற்றன்
தமிழில் - சொக்கன்

கரடியாரே, நான் நல்லவனாய் இருக்கவேண்டும் என்று நீர் விரும்பினால், உமது கரட்டுக்களில் சிலவற்றைத் தயவுசெய்து எனக்குத் தாரும்” என்று முயலார் மன்றாடும் குரலில் வேண்டினார்.

ஆனால், கரடியார் இளகவில்லை. “நீர் போக்கிரியாய் இருந்தால் என்ன? நல்லவனாய் மாறினால் என்ன? எனக்கு அது பற்றி அக்கறையில்லை. நான் கரட்டைத் தரப்போவதில்லை. வீணாக என் நேரத்தைப் போக்கடிக்காமல் போய்விடும்” என்று எரிச்சலோடு சொன்னார்.

முயலார் தலைகுனிந்தபடி வெளியேறினார். கரடியார் மீது அவருக்கு அளவுகடந்த கோபம். “நான் விரும்பியதைப் பெறமுடியாவிட்டால், நான் நல்லவனாய் மாறி என்ன பயன்? இருக்கட்டும், இந்தக் கரடியாரிடமிருந்தே நான் கரட்டைப் பெறாமல் விடப்போவதில்லை” என்று உறுதி செய்து கொண்டும், அதற்கான வழியைச் சிந்தித்துக்கொண்டும் போனார்.

அடுத்தநாள் அதிகாலைப்பொழுது. முயலார் கரடியாரின் கரட் தோட்டத்துக்குப் போனார். வேண்டிய அளவு கரட்டுக்களைக் கிண்டி எடுத்தார். அவற்றை ஒரு சாக்கில் போட்டு நிறைத்து மூட்டையாகக் கட்டினார். அதைத் தரையில் இழுத்துக்கொண்டு கரடியாரின் வீட்டு வழியாக வந்தார்.

அது கரடியார் காலை உலாச் செல்லும் நேரம். முயலாரை அவர் வழியிலே சந்தித்தார்.

“முயலாரே, உது என்ன மூடை?”

“கரட் மூடை, சந்தியிலே வாங்கி வருகிறேன்.” கரடியார் - முயலார் சொன்னதை நம்பினார். “மூடை உம்மிலும் மூன்று மடங்கு இருக்கும் போலிருக்கிறதே. உம்மால் வீடுவரை கொண்டு செல்ல முடியுமா?” என்று அவர் அனுதாபத்துடன் கேட்டார்.

அதுதான் நானும் யோசிக்கிறேன். இங்கே எங்காவது இந்த மூடையைப் பாதுகாப்பாக வைத்து விட்டு, எனக்கு வேண்டிய கரட்டைக் கொண்டு செல்லலாம் என்றிருக்கிறேன்.

பிறகு பிள்ளைகளைக் கூட்டிவந்து மிகுதியை எல்லாருமாகக் கொண்டு செல்வதுதான் புத்தி என்றார் முயலார்.

கரடியாருக்குத் திடீரென்று ஒரு யோசனை உதித்தது. “முயலாரிடம் கரட்டைப் பெற்றுக்கொண்டு, மூன்று தேன் சாடிகளைப் பண்டமாற்றாகக் கொடும்போம். என்து கரட் தோட்டத்துக்குப் போய்க் கிண்டி எடுப்பது அலுப்பான வேலை. அதை இரண்டு, ஒருநாள் பொறுத்துச் செய்யலாம்.”

கரடியார் தனது யோசனையை முயலாருக்கு எடுத்துச் சொன்னார். முயலாரின் முகம் மலர்ந்தது. “கரடியாரே நேற்று என்னோடு நீர் உரையாடியபொழுது, உம்மைப் பற்றி மிகத் தவறாக நினைத்திருந்தேன். இப்பொழுதுதான் நீர் எவ்வளவு நல்லவர் என்று தெரிகின்றது. எனது கரட்டுக்கு மாற்றாக மூன்று தேன் சாடிகள் பெற முழுமனத்தோடு சம்மதிக்கிறேன்” என்றார்.

கரடியார் தம் வீட்டினுள்ளே சென்று, மூன்று தேன் சாடிகளை எடுத்து வந்து முயலாருக்குக் கொடுத்தார்.

ஆஹா! எனது கரட்டிலும் உமது தேன் சாடிகளின் பெறுமதி அதிகம்தான், உமது தாராளமனம் யாருக்கு வரும்? கரடியாரே, உம்மைப்போல நல்லவரை நான் கண்டதேயில்லை. இது பண்டமாற்றல்ல. எனக்கு நீர் செய்யும் பெரும் உதவி என்று முயலார் பசை அடிக்க அடிக்கக் கரடியாரின் உச்சி குளிர்ந்துவிட்டது. அவர் சாக்கினுள்ளிருந்து எட்டு நல்ல கரட்டுக்களை எடுத்து “இதுவும் உமக்குத்தான்” என்று முயலாருக்குக் கொடுத்தார். முயலார் பல முறை நன்றி சொல்லி வீட்டுத் தேன் சாடிகளுடனும், கரட்டுக்களுடனும் தம்வீடு சென்றார்.

இரண்டு நாள்களுக்குப் பின்பு, கரடியார் தமது கரட் தோட்டத்துக்குப் போனபொழுதுதான் உண்மை அவருக்கு வெளிச்சமாயிற்று. கரடியாரின் கரட்டையே கொடுத்து முயலார் தேன்சாடிகளும், கரட்டுக்களும் பெற்றுச் சென்றிருக்கிறார்.

கரடியாருக்குக் கோபத்தை அடக்கமுடியவில்லை. பற்களை நெருமினார், உறுமினார். “அந்த முயல் போக்கிரிக்கு என்னிடமிருந்த மிகத்திறமான எட்டுக் கரட்டுக்களைக் கொடுத்தேன். போதாததற்கு மூன்று சாடி தேனும் கொடுத்தேன். உவனைப் பிய்த்துப் பிடுங்கி எடுக்காமல் விடமாட்டேன். மிக விரைவில் இது நடக்கத்தான் போகிறது” என்று அவர் தமக்குத் தாமே சொல்லிக் கொண்டு மனம் குமுறினார். ஆனால், கரடியார் நினைத்தது இதுவரை நடைபெறவில்லை.

முயலார், கரடியாரின் முகத்திலே விழிக்காமலே ஒளித்து ஒளித்துக் காலங்கடத்தி வருகிறார்.

# இளந்தேனீக்கள் கழகம்
## அங்கத்தவர்கள்



முழுப்பெயர் :-
ர.தேனுகா
கற்கும் பாடசாலை :-
சுண்டுக்குளி மகளிர் கல்லூரி.
கற்கும் தரம் :- 10
ஆர்வமுள்ள துறைகள் :-
பத்திரிகை வாசித்தல், முத்திரை சேகரித்தல்.



முழுப்பெயர் :-
தி.ரமேஜன்
கற்கும் பாடசாலை :-
அனலை சதாசிவ மகா வித்தியாலயம்.
கற்கும் தரம் :- 9
ஆர்வமுள்ள துறைகள் :
கல்வி, விளையாட்டு, கவிதை.



முழுப்பெயர் :-
கி.சரணிகா
கற்கும் பாடசாலை :-
இந்து மகளிர் கல்லூரி.
கற்கும் தரம் :- 8
ஆர்வமுள்ள துறைகள் :-
பத்திரிகை வாசித்தல், விஞ்ஞானம்.



முழுப்பெயர் :-
சி.விஜிந்தன்
கற்கும் பாடசாலை :-
கொழும்புத்துறை துரையப்பா வித்தியாலயம்.
கற்கும் தரம் :- 7
ஆர்வமுள்ள துறைகள் :-
சித்திரம், பத்திரிகை வாசித்தல், எழுத்து வேலை.

முழுப்பெயர்:-
தே.பேடினன் வின்ஸ்லோ
கற்கும பாடசாலை :-
புனித ஜோன் பொஸ்கோ
கற்கும் தரம் :- 3
ஆர்வமுள்ள துறைகள் :-
விளையாட்டு, கதை, வாசிப்பு.

முழுப்பெயர்:-
சே.சஞ்சிகா
கற்கும் பாடசாலை :-
தெல்லிப்பளை மகாஜனாக் கல்லூரி.
கற்கும் தரம் :- 6
ஆர்வமுள்ள துறைகள் :-
கதைப்புத்தகம் வாசித்தல், விளையாட்டு.

முழுப்பெயர்:-
சி.அசோகமாலா
கற்கும் பாடசாலை :-
உடுப்பிட்டி மகளிர் கல்லூரி
கற்கும் தரம் :- 10
ஆர்வமுள்ள துறைகள் :-
புத்தகம் வாசித்தல், பத்திரிகை படித்தல், பாட்டுப்பாடுதல்.

முழுப்பெயர்:-
சி.சிவரஞ்சினி
கற்கும் பாடசாலை :-
வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி.
கற்கும் தரம் :- 11
ஆர்வமுள்ள துறைகள் :-
பத்திகை வாசித்தல், கணிதம், தொலைக்காட்சி பார்த்தல்.

# விடுகதைகளும் விடைகளும்

1. அண்ணன் - தம்பி இரண்டு பேர், அவரைச்சுற்றிப் பன்னிரண்டு பேர். அவர் யார்?
   மணிக்கூடு.
2. சிறுதூசு விழுந்துவிட்டால், குளமே கலங்கிவிடும். அது என்ன?
   கண்.
3. நேற்று பச்சை, இன்று மஞ்சள் தோலை உரித்தால் அமிர்தம். அது என்ன?
   வாழைப்பழம்.
4. கை உரிக்க, கண் அழும். அது என்ன?
   வெங்காயம்.
5. முப்பத்திரண்டு பேர் காவல் இருந்தும், சும்மா இருக்காது. அது என்ன?
   நாக்கு.
6. தொப்பியோடு பிறந்து தொப்பியோடு மடிபவன். அவன் யார்?
   பனம்பழம்.
7. பல்லிருந்தும் சிரிக்காது. அது என்ன?
   சீப்பு.
8. நாலுகால் இருக்கும் நடக்கமாட்டான். அவன் யார்?
   கதிரை.



1. மேடு கண்டால் ஒதுங்குவார், பள்ளம் கண்டால் பதுங்குவார். அவர் யார்?
   தண்ணீர்.
2. உள்ளூர் உத்தமிக்கு உள்ளங்கையில் ஓட்டை அது என்ன?
   உழுந்துவடை.
3. ஏறும் இறங்காது அது என்ன?
   வயது.
4. மரத்திலோ இலை வடிவம், அரைத்தாலோ கலை வடிவம் அது என்ன?
   மருதாணி.
5. மணி அடித்ததும் மலைப்பாம்பு ஊருது அது என்ன?
   ரயில் வண்டி.



சே.சஞ்சிகா
தரம் - 6
தெல்லிப்பளை மகாஜனாக் கல்லூரி.

# தகவல் பெட்டகம்

- ☆ வைரம், கிரா:பைட் ~ இவை இரண்டின் அணு எடையும் சமம்.
- ☆ ஒற்றைச் செல்லுடைய Protista பாசிதான் மிகச்சிறிய செடி.
- ☆ அன்னாசிப்பழத்துக்கு வாசம் தருவது எத்தில் ப்யுட்ரேல்.
- ☆ பிரபஞ்சத்தின் மிகப்பெரிய நட்சத்திரம் betelgeuse. இது சூரியனைவிட 300 மடங்கு பெரியது.
- ☆ ஆர்யபாட்டியம் ~ இது வானவியல் துறையில் எழுதப்பட்ட முதல் நூல்.
- ☆ ஜப்பான் நாட்டில் பின்பற்றப்படும் புராதனமான ஷின்டோ மதத்துக்குப் புனிதநூல் என்று எதுவும் கிடையாது.
- ☆ உணவுப் பழக்கத்தைக் கட்டுப்படுத்துவதன் மூலம், நோய்களுக்குச் சிகிச்சை தரும்முறையினை 'ப்ரோமேடோதெரபி' என்பர்.
- ☆ உலகின் அதிக மக்கள் தொகை கொண்ட சீனாவில் தான், மிகக்குறைந்த மக்கள் தொகை கொண்ட நகரமான யூமென் இருக்கிறது. இங்கு சாங்கூ என்பவரும், அவரது இரண்டு மக்களும் மட்டுமே இருக்கின்றனர். இதற்கு ஒரு நகரத்துக்குரிய அனைத்து அதிகாரபூர்வ உரிமைகளும் உள்ளன.
- ☆ சூரியனைச் சுற்றிவரும் வால் நட்சத்திரங்களின் எண்ணிக்கை சுமார் 10 கோடி.
- ☆ ஆறு, கடல், ஏரி இவற்றை வரைபடங்களாக்கும் முறையை ஹைட்ரோக்ராபி என்பார்.

# கஞ்சன் சேர்த்த பணம்

ஓர் ஊரில் ஒரு கஞ்சன் இருந்தான். அவன் நிறையப் பணத்தைச் சேர்த்துச் சேர்த்து வைத்திருந்தான். அப்பணத்தைச் செலவழிக்கமாட்டான். அதை அவன் வீட்டில் வைத்திருக்க யாரும் எடுத்துவிட்டாலும் என்று, அவன் அப்பணததைத் தன் காணகுள் புதைத்து வைத்திருந்தான்.



தினமும் சென்று, அப்பணத்தை எடுத்துப் பார்த்துவிட்டு வருவான். அதேபோல், ஒருநாள் அவன் அப்பணத்தைப் பார்த்துக் கொண்டிருந்தபோது - ஒரு திருடன் மறைந் திருந்து கண்டுவிட்டான். அக்கஞ்சன் வீடு சென்றதும் அத்திருடன் அப்பணத்தை எடுத்துக்கொண்டு போய் விட்டான். மறுநாள் அவன் சென்று அப்பணத்தை பார்த்த போது, அப்பணத்தைக் காணவில்லை. நன்றாகத் தேடிய போது, ஒரு துண்டில் - நீ பணத்தைச் செலவழியாது விட்டதால், நான் எடுத்தேன் என்று எழுதப்பட்டிருந்தது. அதை வாசித்த கஞ்சன் கவலையுடன் வீடு சென்றான்.

லோ.தேனுஷா
மாணிக்கவாசகர் வித்தியாலயம்.

வரிக்குதிரையைத் தேடும் அதன் நண்பனுக்கு வழிகாட்டுங்கள்.



# உங்கள் கைவண்ணம்



# இளந்தேனீக்கள் கழகம்

நீங்கள் பதினைந்து வயதுக்குட்பட்டவரா?

அப்படியானால் நீங்களும் நமது ஈழநாடு சிறுவர் அரங்க 'இளந் தேனீக்கள்' கழகத்தில் அங்கத்தவராகலாம்.

இளந்தேனீக்கள் கழகம் உங்கள் ஆற்றலையும் திறன்களையும் வெளிப்படுத்தத் தயாராக இருக்கின்றது.

நீங்கள் செய்யவேண்டியது இதுதான்.

கீழ் உள்ள படிவத்தைப் பூரணப்படுத்தி உங்களின் தெளிவான புகைப்படம் ஒன்றுடன் எமக்கு அனுப்பி வையுங்கள்.

உங்கள் விபரங்கள் புகைப்படத்துடன் சிறுவர் அரங்கத்தில் பிரசுரமாவதுடன் இளந் தேனீக்கள் கழக உறுப்பினர் அட்டை விரைவில் உங்கள் வீடு தேடிவரும்.

விண்ணப்பங்கள் அனுப்பவேண்டிய முகவரி:-

இளந்தேனீக்கள் கழகம்
சிறுவர் அரங்கம்
நமது ஈழநாடு
267,நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

## இளந்தேனீக்கள் கழகம்
### விண்ணப்பம்

முழுப் பெயர் :..................................
கற்கும் பாடசாலை :..................................
கற்கும் தரம் :..................................
வீட்டு முகவரி :..................................
பிறந்த திகதி :..................................
ஆர்வமுள்ள துறைகள் :..................................
:..................................

................ திகதி
........................... ஒப்பம்

........................... அதிபர்/ஆசிரியர் ஒப்பம்
........................... பெற்றோர் ஒப்பம்

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanadu.com

**சிந்தனைக்கு**

அறிவுடையார் ஆவது அறிவார் அறிவுஇலார்
அஃதுஅறி கல்லா தவர்.

- திருக்குறள்.

# நமது நோக்கு

## நியாயமான நிராகரிப்பு!

விடுதலைப் புலிகள் முன்வைத்திருந்த இடைக்கால நிர்வாக அமைப்புக்கான கோரிக்கைக்கு உரிய வகையில் செவிசாய்க்கத் தவறியதோடு - அதிகாரமற்ற, பொருத்தப்பாடற்ற வகையில் அரசாங்கம் பிரேரித்திருந்த மாற்று யோசனையை - விடுதலைப் புலிகள் நிராகரித்திருக்கின்றனர்.

அரசாங்கம், விடுதலைப் புலிகளுக்கு அனுப்பியிருந்த பதிலில் குறிப்பிட்டுள்ள இடைக்கால அமைப்பு - நடைமுறைப்படுத்தும் அதிகாரங்களைக் கொண்டிராத வெறும் ஆலோசனைச் சபையாகவே அமையும் என்பதுடன் - அதில், விடுதலைப் புலிகளின் பங்கேற்புக் குறித்துத் தெளிவாக வரையறுக்கப்பட்டிருக்காத நிலையில் - இந்த அமைப்பினால் வடக்கு-கிழக்கிலுள்ள தமிழ் மக்களின் புனர்வாழ்வு, புனரமைப்புத் தேவைகளுக்கு ஆக்கபூர்வமான பங்களிப்பு எதுவும் வழங்க முடியாது என்பதும், ஏற்கனவே அரசியல் அவதானிகளால் சுட்டிக்காட்டப்பட்டுவந்த நிலையில் - விடுதலைப் புலிகளின் நிராகரிப்பு அறிவிப்பும் வெளிவந்திருக்கிறது.

அரசாங்கத்தின் மாற்று யோசனையின்படியான அமைப்பு, உரிய அதிகாரங்களைக் கொண்டிருக்காது என்பதோடு - அதனது சகல நடவடிக்கைகளும், அரசாங்க நிறுவனங்களுடனேயே தொடர்புகளைக் கொண்டிருப்பதால் - இந்த அமைப்பின் மூலம், தமிழ் மக்களுக்கான அபிவிருத்திப் பணிகளை முன்னெடுக்கும் செயலாற்றல் இழிவடைகிறது என்பதையும் - விடுதலைப் புலிகள், அரசுக்கான தமது பதிலில் எடுத்துக் காட்டியிருக்கின்றனர்.

முன்னதாக - தமிழ் மக்களுக்கான உடனடி புனர்வாழ்வு, புனரமைப்புத் தேவைகளுக்கு - சகல அதிகாரங்களும் கொண்ட இடைக்கால நிர்வாக அமைப்பின் அவசியத்தை விடுதலைப் புலிகள் ஆரம்பம் முதலே வலியுறுத்தி வந்துள்ளபோது- அதனைக் கருத்திலெடுக்காது - இப்படியான 'ஆலோசனைச்சபை'த் திட்டத்தை அரசாங்கம் முன்வைத்தபோதே - அது தமிழர் தரப்பினால் ஏற்றுக் கொள்ளப்படுவதற்குரிய வாய்ப்புக்களைக் கொண்டிருக்கவில்லை என்பது தெளிவானது.

அதிலும் - பொதுத் தேர்தலுக்கு முந்திய காலத்தில், பிரசார நடவடிக்கைகளின்போது - விடுதலைப் புலிகள் பங்கேற்கும் ஓர் இடைக்கால நிர்வாக அமைப்பை உருவாக்குவேன் என, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க வாக்குறுதி வழங்கியிருந்துவிட்டு -

பின்னர், அவ்வாறான அமைப்பை உருவாக்குவதில் சட்டச்சிக்கல்களும், அரசியலமைப்புப் பிரச்சினைகளும் இருப்பதாக தலைகீழ்ப் பிரகடனம் செய்தபோது - அரசாங்கம் தடுமாறுகின்றது என்பதை மக்கள் புரிந்து கொண்டார்கள்.

இந்தத் தடுமாற்றம் - அரசாங்கம் வெளியே சொல்லிவரும் அமைதி முயற்சிகளைத் தொடர்வதற்கான உறுதிப்பாட்டிற்கும், சமாதானத்தின் தேவைகளை நிறைவேற்றுவதற்கான அர்ப்பணிப்புக்கும் - முற்றிலும் முரணானதாகவே இருந்தது.

விடுதலைப் புலிகள், இடைக்கால நிர்வாகத்தின் அவசியத்தைப் பற்றி எழுந்தமானமான முடிவுக்கு வரவில்லை என்பதுடன், அரசாங்கத்தின் இணக்கப்பாட்டுடன் அமைக்கப்பட்ட 'சிறான்' அமைப்பால், எவ்வகையிலும் ஆக்கபூர்வமாகச் செயற்பட முடியாத நிலையிலேயே - விடுதலைப் புலிகள் மீண்டும் இடைக்கால நிர்வாக அமைப்பின் தேவைபற்றி வலியுறுத்தினார்கள் என்பதையும் அரசாங்கத்திற்குப் பல வழிகளிலும் தெளிவுபடுத்தப்பட்டிருந்தது.

விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கம் - நோர்வே வெளியுறவு அமைச்சருக்கு எழுதிய விபரமான கடிதத்திலும் -

தலைவர் பிரபாகரன், நோர்வே வெளியுறவு அமைச்சரை நேரடியாகச் சந்தித்தபோதும் மிகத்தெளிவாகவே, விடுதலைப புலிகளின் இந்த நிலைப்பாடு எடுத்துக் கூறப்பட்டிருந்தது.

இடைக்கால நிர்வாக யோசனையை ஏற்கனவே, பிரதமர் ரணில் தனது பிரசார மேடைகளில் வெளியிட்டிருந்ததுடன், இலங்கை - இந்திய ஒப்பந்தத்தின் போதும்கூட இதே போன்ற யோசனை இந்தியத் தரப்பில் முன்வைக்கப்பட்டிருந்ததும் - இடைக்கால நிர்வாக அமைப்பொன்றை, அரசியலமைப்புக்கு வெளியே அமைப்பதற்கான சாத்தியப்பாடுகளை உறுதிப்படுத்தியிருந்தன.

ஆனால் - அரசாங்கமோ தனது முன்னைய அறிவிப்பிலிருந்து விலகியதாக-'செயற்படுத்த முடியாத விடயங்களே வலியுறுத்தப்படுவதாகவும், சட்ட திட்டத்துக்கு அமைவாகவே நடக்க வேண்டியுள்ளதாகவும்' பிரதமர் ரணிலின் அறிவிப்பு வெளியாகியிருக்கிறது.

இந்நிலையில் அரசாங்கத்தின் பொருத்தப்பாடற்ற யோசனையை நிராகரித்திருக்கும் விடுதலைப் புலிகளின் பதிலானது - அரசாங்கம், இனியும் தனக்கு முன்பிருந்த சிங்கள அரசாங்கங்களின் போக்கிற்குள் திரும்பினால் - தமிழர் தரப்பும் உறுதியான நடவடிக்கைகளை மேற்கொள்ளும், என்ற வலுவான செய்தியையும் எடுத்துச்சொல்லியிருக்கின்றது.

அதேவேளை - இத்தகையதொரு இடைக்கால நிர்வாகக கட்டமைப்பை அமைத்து - தமிழ் மக்களுக்கு நம்பிக்கை தரக்கூடிய செயற்பாடுகளை ஆற்றவியலாத அரசாங்கம் - தமிழர்களுக்கான கௌரவமான, நீதியான தீர்வை எப்படிப் பெற்றுத் தரப்போகின்றது என்ற பெரும் சந்தேகமும் தமிழ் மக்களுக்கு ஏற்பட்டிருக்கிறது.

தமிழ் மக்கள் ஏற்றுக்கொள்ளாத அரசியலமைப்பையும், சட்ட திட்டங்களையும் காரணங்காட்டி - தமிழ் மக்களின் நீதியான கோரிக்கைகளுக்கு அரசாங்கம் செவிசாய்க்காத பட்சத்தில் - ரணில் அரசாங்கம் சமாதானம் பற்றிப் பேசுவதற்கான தார்மீக உரிமையை இழந்து வருகின்றது என்றே கொள்ளமுடியும்.

# சீனன்குடா குதங்கள் புனரமைப்புப் பணி; இந்திய அமைச்சர் ஆரம்பித்து வைத்தார்

## முந்நூறு மில்லியன் ரூபா செலவீட்டில் திட்டம்





இந்திய அமைச்சர் ராம் நாயக் - குதங்கள் புனரமைப்புப் பணிக்கான பெயர்ப் பலகையைத் திரைநீக்கம் செய்வதையும், புனரமைப்புப் பகுதியை அவர் பார்வையிடுவதையும் படங்களில் காணலாம்.

(திருகோணமலை)

திருகோணமலை - சீனன்குடாப் பகுதியில் உள்ள எண்ணெய்க் குதங்களைப் புனரமைப்பதற்கானதும், நவீனமயப் படுத்தலுக்கானதுமான பணிகளை - இந்தியப் பெற்றோலியத் துறை அமைச்சர் ராம் நாயக் நேற்று ஆரம்பித்து வைத்தார்.

சீனன்குடா பெற்றோலியக் கூட்டுத்தாபன வளாகத்திலுள்ள எண்ணெய்க்குதங்களைப் புனரமைப்பதற்கும் வேலைகள், 3 மில்லியன் ரூபா செலவில் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

நேற்று நடைபெற்ற புனரமைப்புப் பணி தொடர்பான அடிக்கல் நாட்டும் வைபவத்தில் - இந்திய அமைச்சரோடு, இலங்கைக்கான இந்தியத் தூதுவர் நிருபம்சென், இந்தியப் பெற்றோலிய அமைச்சின் செயலாளர் பி.கே.சதுர்வேதி, இந்தியப் பெற்றோலிய நிலையத்தின் தலைவர் எஸ். இராமச்சந்திரன், புதிதாக உருவாக்கப்பட்ட இலங்கை - இந்திய பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் தலைவர் என். கே.நய்யார் மற்றும் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சம்பந்தன் ஆகியோரும் பங்கேற்றனர்.

இந்த வைபவத்தில் உரையாற்றிய இந்தியப் பெற்றோலியத்துறை அமைச்சர் ராம் நாயக்,

புதிதாக உருவாக்கப்பட்டிருக்கும் இலங்கை - இந்தியப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் (**Lanka Indian Oil Corporation**) திருகோணமலையிலுள்ள 99 எண்ணெய்க்குதங்களில் 15 குதங்களில் மட்டும் - உரிய நவீனமயப்படுத்தல்களையும், புனரமைப்பையும் மேற்கொள்ளவிருக்கின்றது.

இந்தப் புனரமைப்பின் முதற்கட்டம் இந்த வருடம் டிசம்பர் மாதத்தினுள் 190 மில்லியன் ரூபா செலவீட்டில் நிறைவு செய்யப்படும்.

திருமலையிலுள்ள இந்த எண்ணெய்க் குதங்களினைக் குத்தகைக்குப் பெற்றுக்கொண்டுள்ள இலங்கை - இந்தியப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம், இந்தக் குதங்களை உலகத் தரத்திற்கு நவீனமயப்படுத்திக் கொடுக்கும்.

வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்ததும், இயற்கைத்துறை முகத்தைக் கொண்டதும், கடல் நடவடிக்கைகளுக்கு முக்கியத்துவமான திருமலைக்கு விஜயம்செய்து - இவ்வாறு ஒரு வைபவத்தில் பங்கேற்பதையிட்டு மகிழ்ச்சியடைகிறேன் என்று கூறினார்.

## மன்னாரில் காணாமற்போன 4 சிறுவர் வவுனியாவில் மீட்பு

(வவுனியா)

மன்னாரில் காணாமற்போன நான்கு சிறுவர்கள் நேற்று முன்தினம் வவுனியா குருமன்காட்டுப்பகுதியில் விடுதலைப் புலிகளின் அரசியற்துறையினரால் கண்டுபிடிக்கப்பட்டனர்.

மேரிநாதன் ஜான்சன் (வயது 15), மேரிநாதன் எடிசன் (வயது 13), மகாதேவன் கஜரூபன் (வயது 13), செய்தேயு தீபன் (வயது 13) ஆகியோரே காணமற்போன சிறுவர்களாவர்.

மன்னார் - எழுத்தூர் பகுதியிலிருந்து நகரத்துக்குச் சென்ற இந்த சிறுவர்கள், எவருக்கும் தெரியாமல் வவுனியா நோக்கி பயணித்துள்ளனர். இவர்களைக் குருமன்காட்டில் கண்டுபிடித்த வவுனியா மாவட்ட அரசியற்துறையினர், மன்னார் மாவட்ட அரசியற்துறையினரிடம் கையளித்தனர். (03)

## நிலாவரையில் பெருகும் பாதீனியக் களைகள்

### பூக்கும் நிலையிலுள்ளதால் ஆபத்து

புத்தூர் - புன்னாலைக்கட்டுவன் வீதியில் நிலாவரைப் பகுதியில் பாதீனியம் களைகள் பெருகிவருகின்றன. முன்னர் இப்பகுதியில் பெருமளவு பாதீனியக் களைகள் பரவியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இது குறித்துப் பத்திரிகைகள் மூலம் செய்திகள் வெளியானதையடுத்து இக்களைகளை ஒழிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

ஆனால் - அண்மையில் பெய்த மழையைத் தொடர்ந்து, இப்பகுதியில் மீண்டும் பாதீனியக் களைகள் பெருகியுள்ளன. இவை தற்போது பூக்கும் பருவத்தில் காணப்படுவதும் குறிப்பிடத்தக்கது.

இக்களைகளை உடனடியாக ஒழிக்க நடவடிக்கை எடுக்காவிட்டால், தற்போது பூத்துள்ள இக்களைகளிலிருந்து விதைகள காற்றின்மூலம் பரவும் ஆபத்து இருப்பதாக இப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர். (12)

## விடுமுறை நாட்களில் கடைகளை மூட அறிவுறுத்து!

சனி பிற்பகல் 2 மணிக்குப் பின்பும் ஞாயிறு, போயா மற்றும் வர்த்தக விடுமுறை தினங்களிலும் , சில வர்த்தக சங்கங்களுக்கு உட்பட்ட கடைகள் திறக்கப்பட்டு வியாபாரம் மேற்கொள்ளப்படுவதால் - அச்சங்கங்களை அண்டிய பகுதிகளில் உள்ள மற்றைய சங்கங்களின் கடை உரிமையாளர்கள் பாதிக்கப்படுவதாக, யாழ். மாவட்ட வர்த்தக சங்கங்களின் சம்மேளனம் தெரிவித்துள்ளது.

இதனால் - சகல வர்த்தக சங்கங்களும் ஒரே நடைமுறையைப் பின்பற்ற வேண்டுமெனவும், சனிக்கிழமைகளில் பிற்பகல் 2 மணிக்குப் பின்பும், ஞாயிறு, போயா மற்றும் வர்த்தக விடுமுறை தினங்களிலும் சகல வர்த்தக சங்கங்களும் தமது எல்லைக்கு உட்பட்ட வர்த்தக ஸ்தாபனங்களை மூடுவித்து தங்களின் ஒத்துழைப்பை வழங்கவேண்டுமெனவும் - யாழ். மாவட்ட வர்த்தகர் சங்கங்களின் சம்மேளனத்தின் நிர்வாக சபைக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

## சுவாமியார் வீதியில் விகாரை அமைக்க முயற்சி

கொழும்புத்துறை சுவாமியார் வீதிப்பகுதியில் பௌத்த விகாரை அமைக்கும் பணியில் படையினர் ஈடுபட்டுவருவதாகத் தெரியவருகின்றது.

யாழ்.கொழும்புத்துறை இந்து மகாவித்தியாலயத்துக்கு அருகே இந்து மதகுரு ஒருவரது வீட்டில் கடந்த வருடம் பௌத்த விகாரை அமைக்க இராணுவத்தினர் நடவடிக்கை எடுத்தவேளை, அதற்கு அப்பகுதி மக்களும், இந்து அமைப்புக்களும் எதிர்ப்புக் காட்டியமையினால், அம் முயற்சி கைவிடப்பட்டது குறிப்பிடத்தக்கது.

இதன்பின் - புதிதாக மறுபடியும் புத்த கோயிலொன்று, தற்போது இராணுவம் நிலைகொண்டுள்ள சுவாமியார் வீதிப் பகுதியில் அமைக்கப்பட்டுவருகின்றது. (சு,09)

## 2003 ஆம் ஆண்டுக்கான வாக்காளர் இடாப்பு தயாரிப்புப் பணிகள் பூர்த்தி

யாழ்.மாவட்ட தேர்தல் திணைக்கள அலுவலகத்தில் 2002 ஆம் ஆண்டுக்கான வாக்காளர் இடாப்புத் தயாரிக்கும் பணி முடிவடைந்துள்ளது.

இதையடுத்து 2003 ஆம் ஆண்டுக்கான வாக்காளர் இடாப்பு தயாரிக்கும் பணி வெகுவிரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளதாகத் தெரியவருகிறது.

அதேவேளை - பொதுமக்கள், தேர்தல் இடாப்பின் பிரதியைப் பெறவிரும்பினால், புதிய ஆண்டுக்கான இடாப்பிலிருந்து அதனை எந்தவித தாமதமுமின்றி உடனே பெற்றுக்கொள்ளலாம் எனவும், கடந்த காலங்களின் இடாப்பிலிருந்து பிரதிகளைப் பெறும்போது, தமது கிராம அலுவலரின் கடிதத்தோடு அப்பகுதிப் பிரதேசசெயலரின் சிபாரிசுடன் விண்ணப்பப் படிவத்தை நிரப்பி விண்ணப்பிக்கவேண்டும் எனவும் தேர்தல் திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

## தென்பகுதி மாவட்டங்களில் வேகமாகப் பரவும் வயிற்றோட்டம்

வெள்ளப் பெருக்கினால் பாதிக்கப்பட்ட தென்பகுதி மாவட்டங்களில் வயிற்றோட்டம் போன்ற தொற்றுநோய்கள் வேகமாகப் பரவிவருவதாக சுகாதார அமைச்சின் தொற்றுநோய்த் தடுப்புப்பிரிவு அறிவித்துள்ளது.

மாத்தறை மாவட்டத்தில் மட்டும், ஐம்பது பேருக்கு மேல் வயிற்றோட்டத்தால் பாதிக்கப்பட்டு வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். ஏனைய மாவட்டங்களிலும் வயிற்றோட்டம் போன்ற தொற்றுநோய்களின் தாக்கம் அதிகமாக இருப்பதாகச் சுகாதார அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்தன.

# கடல் யாருடையது?

**இக்கட்டுரை - நீர்கொழும்பிலிருந்து சிங்களம், தமிழ் ஆகிய இருமொழிகளில் வெளிவரும் 'சகோதரக் கண்ணோட்டம்' - 'ஒளியை நோக்கி' இதழில் வெளியானது.**

எம்முடைய கடற்பிராந்தியத்தில் - இந்தியா, சீனா, கொரியா, தாய்வான் போன்ற நாடுகளின் மீனவர் வள்ளங்களுக்கு மீன்பிடிக்கப் போதுமானளவு சுதந்திரம் கொடுக்கப்பட்டுள்ளது, ஆனால், வடக்கு - கிழக்கு மீனவர்களுக்குச் சுதந்திரமாக மீன்பிடிக்கத் தடை விதிக்கப்பட்டுள்ளது. வெளிநாட்டு மீன்பிடி வள்ளங்கள் உள்நாட்டில் மீன்பிடிப்பதையும், எமது வளங்களைக் கொள்ளையடிப்பதையும் பார்த்துக்கொண்டிருக்கும் கடற்படை, எமது மீனவர்கள் மீன்பிடிக்கும்போது - வள்ளங்களை அழிக்கின்றது, வலைகளை அறுக்கின்றது, அடித்துக் கடலில் தள்ளிவிடுகின்றது, சுட்டுக்கொலை செய்கின்றது. இது இவ்வாறெனின், இலங்கைக் கடற்படையினருக்குக் கொடுக்கப்பட்டுள்ள பொறுப்பு என்ன? எமது கடல் வளங்களைக் கொள்ளையிடும் வெளிநாட்டுக் கொள்ளையர்களைப் பாதுகாத்து உள்நாட்டு மீனவர்களைக் கொலைசெய்யும் பொறுப்பா?

ஒரு சிலர் 'அரசு நல்லது, கடற்படை பிழையாகச் செயற்படுகின்றது' என்று கூறுகின்றனர். ஆயினும், உண்மை அதுவா? எமது நாட்டில் வெளிநாட்டவர் மீன்பிடிக்க அனுமதி அளித்தது அரசா? கடற்படையா? அரசுதான் அனுமதி கொடுத்துள்ளது. கடற்படை அரசின் தேவைகளையும், நோக்கங்களையும் நிறைவேற்றுகின்றது. வெளிநாட்டு மீன்பிடி வள்ளங்களைப் பாதுகாக்கும்படி கூறும் அரசு, உள்நாட்டு மீனவர்களுக்கு விதிக்கப்பட்டுள்ள தடையை அகற்றவேண்டாம் என அறிவுறுத்தல் விடுகின்றது. அத்தோடு மீனவர்களுக்கு இழைக்கப்படுகின்ற இன்னல்களைத் தொடரவேண்டாம் என அறிவிப்பதில்லை. இது ஏன்? கடல் கொழும்பு அரசுக்கே சொந்தமானது எனக் கூறப்படுகின்றது. எந்தவொரு வெளிநாட்டு நிறுவனத்திற்கும் மீன்பிடிக்கும் அங்கீகாரம் அரசுக்கே உண்டு எனக் கூறப்படுகின்றது. ஆனால், வட-கிழக்கு மீனவர்களுக்கு மட்டும் அந்த உரிமை இல்லை.

தெற்கின் இரணவில, கொழும்பு, நீர்கொழும்பு பிரதேசங்களிலும் கடற்படை மீனவர்களை அடித்துத் துன்புறுத்துகின்றது, கைதுசெய்கின்றது. மீனவர் வள்ளங்களை மோதிச் சிதைக்கின்றது. தென்கடலிலும் வெளிநாட்டு நிறுவனங்கள் மீன்பிடிக்கவும், வள்ளங்களைக் கொள்ளையடிக்கவும் இடங்கொடுத்து வெறுமனே பார்த்துக்கொண்டிருக்கின்றது. இதற்கு எதிராக தெற்கில் தொடர் போராட்டம் ஒன்றுமில்லை. ஆனால், வடக்கு - கிழக்கு தமிழ்மக்கள் அங்குள்ள கடற்பிரதேசம் தமக்குரியது என்று கடந்த இரண்டு தசாப்தங்களாகத் தொடர் போராட்டம் நடத்திவருகின்றனர். இத்தகைய போராட்டம் இலங்கைக்கும், வெளிநாட்டு நிறுவனங்களுக்கும் பலத்த சவாலாக அமைந்துள்ளது. அப்போராட்டத்தை நசுக்கவே யுத்தம் முன்னெடுக்கப்பட்டது. தொடர்ந்து மீனவர்களைத் தாக்குவதும், அண்மையில் புலிகளின் கப்பல் தாக்கி அழிக்கப்பட்டதும் போராட்டத்தை நசுக்கவே. போர்நிறுத்தம் அமுலில் இருக்கும்போது, அடக்குமுறைகள் தொடர்கின்றது என்பதுவே உண்மை.

வெளிநாட்டு மீனவர் வள்ளங்களுக்கு கடல் வளங்களைக் கொள்ளையிட அனுமதித்து, அன்றாட உணவுக்காகத் தொழிலில் ஈடுபடும் எமது தொழிலாளர்களைத் தாக்குவதா தேசிய பாதுகாப்பு? இதற்கெதிராகப் போராடி, தாம் வாழும் பிரதேச கடற்பிராந்தியம் எமக்குச் சொந்தமானது என்று கூறுவதைப் பயங்கரவாதம் என்று கூறப்படுகின்றது. வடக்கு - கிழக்குப் பிரதேசத்



தைப் போன்று தெற்குக் கடற்பிராந்தியத்திலும் மீனவர் தாக்கப்படுகின்றனர். இதற்கு எதிரான அமைப்புரீதியான தொடர் போராட்டம் நிகழாது இருப்பது ஏன்? கடற்படை வடக்கில் மட்டுமல்ல, கொழும்பு கடற்பிராந்தியத்திலும் காவலில் ஈடுபட்டிருப்பது - பயங்கரவாதிகளிடமிருந்து தேசத்தைப் பாதுகாக்கவே என்று வரலாற்றில் போதிக்கப்பட்டு வருகின்றது. தேசிய பாதுகாப்பு என்பது, தம்முடைய சகோதர தமிழ் மக்களின் பிரதேசங்களை கொழும்பு அரசின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவருவதும், வெளிநாட்டுக் கொள்ளையர்களைக் கட்டுப்படுத்த அல்ல என்றும், சிங்கள மக்களுக்கு கூறப்படுகின்றது. இதனைப் புத்திஜீவிகளாலோ, 'சாதரண மக்களாலோ ஏற்றுக்கொள்ளமுடியாது.

வடக்கு - கிழக்கு கடற்பிராந்தியத்தில் எந்தவொரு வெளிநாட்டு மீன்பிடி வள்ளங்களையும் பகிரங்கமாகத் தாக்கியழிக்காத கடற்படை, புலிகளின் கப்பலைத் தாக்குவது தேசிய பாதுகாப்பிற்கு என்று கூறுவது கேள்விக்குரிய விடயமே. அத்தோடு புலிகளின் கப்பலைக் கடற்படை தாக்கியது, தேசியத்தின் பாதுகாப்பின் நிமித்தமே என சிங்கள மக்கள் நினைப்பார்களாயின் எங்கோ தவறு நிகழ்ந்துள்ளது. ஏனெனில், சிங்கள மக்களுக்குச் சொந்தமான தென்கடற்பிராந்தியத்தின் எந்தவொரு வெளிநாட்டு வள்ளங்களும் கைது செய்யப்படுவதில்லை. வல்லரசுகளுக்கு வள்ளங்களைக் கொள்ளையடிக்கச் சுதந்திரமளித்து, சகோதர தமிழ் மக்களைத் தாக்கியழிப்பது இனவாதத்தின் உச்சமே தவிர வேறில்லை. அத்தோடு - உண்மை விரோதிகளை விடுவித்து, தமது சகோதரர்களை விரோதிகளாகத் தீர்மானிப்பது இனவாதத்தின் இன்னுமொரு பரிமாணமே.

இன்றைய நாள்வரை தேசிய பாதுகாப்பு என்பதற்கு கொடுக்கப்பட்ட வரைவிலக்கணம் என்ன? என மீண்டுமொருமுறை சிங்கள மக்கள் தமமிடமே கேள்வி கேட்கவேண்டும். தேசிய பாதுகாப்பு என்று தமது தலைவர்கள் எதனைச் செய்துள்ளார்கள் என்று மனச்சாட்சியோடு சிங்கள மக்கள் சிந்திக்கவேண்டும். துன்பியலை அனுபவித்துக்கொண்டிருக்கும் தமிழ்மக்கள், சிங்கள மக்களின் மனச்சாட்சியிடம் கேள்வி கேட்க வேண்டும்.

தமிழ்மக்களின் போராட்டத்தை பயங்கரவாதம் என்று சிங்கள மக்கள் சிந்திக்கும்வரைக்கும், தமிழ் மக்கள் தம்முடைய உரிமைகளைப் பெற்றுச் சுதந்திரமாக வாழமுடியாது. வட - கிழக்கு தமிழ்மக்கள் தமது கடற்பிராந்தியம் தமக்குச் சொந்தமானது என்று மீண்டும் மீண்டும் கூறுவதைப்போன்று, தெற்கிலும் சிங்கள மக்கள் தமது கடற்பிர்ராந்தியம் தமக்குரியது என்று கூறவேண்டும்.

ஆங்கிலேயரிடத்திலிருந்து இத்தீவைப் பாதுகாக்க - தெற்கில் கெப்பிடிபொல போராடியபோது, வடக்கில் பண்டாரவன்னியனும் போராட்டத்தில் ஈடுபட்டார். ஒரு சில சந்தர்ப்பங்களில் வெளிநாட்டு ஆக்கிரமிப்பிலிருந்து நம்நாட்டைப் பாதுகாக்க இந்நாட்டுத் தமிழ் - சிங்கள சிற்றரசர்கள் ஒருவருக்கு ஒருவர் உதவி செய்தனர். தெற்கின் புதிய பரம்பரையினருக்கு இதைப்பற்றிய தெளிவும், விளக்கமும் இல்லை. இனவாதிகள் இவ்வாறான வரலாற்று நிகழ்வுகளைத் திட்டமிட்டு மறைத்துள்ளனர். உண்மை வரலாற்றை வெளிச்சத்திற்குக் கொண்டுவருவதோடு சகோதரத்துவத்தைக் கட்டியெழுப்ப இன்னும் நிறையவே செய்ய உள்ளன. ★

---

# மூதூர் முஸ்லிம்களுடன் புலிகள் மீண்டும் சந்திப்பு!

(திருகோணமலை)

திருகோணமலையிலுள்ள இலங்கைப் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழு அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் காலை பதினொரு மணியில் இருந்து மாலை நான்கு மணிவரையும் விடுதலைப் புலிகளுக்கும், மூதூர் முஸ்லிம் பிரதிநிதிகளுக்கும் இடையில் மூன்றாம் கட்டப் பேச்சுவார்த்தைகள் நடைபெற்றன.

ஏற்கனவே நடைபெற்ற பேச்சுக்களின்போது இணக்கங்காணப்பட்ட விடயங்களை அமுல்படுத்துவது தொடர்பாகவே, நேற்றுமுன்தினம் இடம்பெற்ற பேச்சுக்களின்போது ஆராயப்பட்டதாகத் தெரியவருகிறது.

மேற்படி சந்திப்பின்போது - விடுதலைப் புலிகள் தரப்பில் திருகோணமலை மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் திலக், மகளிர் அரசியற்துறைப் பொறுப்பாளர் காருண்யா, பொருண்மியப் பொறுப்பாளர் தருமன் ஆகியோர் கலந்துகொண்டனர். முஸ்லிம் தரப்பில் மௌலி எம்.எம். ஹரிம் தலைமையிலான ஐவர் அடங்கிய குழு பிரதிநித்துவம் செய்தது.

# கெற்பலிக் கடலில் மீன்பிடிக்க கட்டுப்பாடு

(பண்டத்தரிப்பு)

மிருசுவில் - கெற்பலிக் கடலில் மீன்பிடிப்பதற்குப் படையினர் விதித்துள்ள கட்டுப்பாடுகள் நீக்கப்படாததால், இக்கடலில் தொழில்செய்து வரும் மக்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்குவதாக தெரிவிக்கப்படுகிறது.

காலை 6 மணிக்கு கடலுக்குச் செல்ல அனுமதிக்கப்படும் மீனவர்கள், முற்பகல் 10 மணிக்குள் கரை திரும்ப வேண்டும். இல்லையேல் கடலுக்குச் செல்லும் பாதையை படையினர் மூடிவிட்டு பிற்பகல் 2 மணிக்கே மீண்டும் திறக்கின்றனர். தாமதித்து கரைக்கு வரும் மீனவர்கள் இதனால், மீனுடன் கடற்கரையில் காத்திருக்க நேரிடுவதாக விசனம் தெரிவிக்கப்படுகின்றது. (43)

## பாஷையூர் அந்தோனியார் பெருவிழா

பாஷையூர் - புனித அந்தோணியார் ஆலயத்தின் வருடாந்த பெருவிழா நாளை ஞாயிறுக்கிழமை மாலை 5.30 மணியளவில் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

நவநாள் ஆராதனை 4 ஆம் திகதி தொடக்கம் 12 ஆம் திகதி வரை நடைபெறும். (119)

# சோழர் சிறுவர் பூங்காவின் பத்தாவது ஆண்டு நிறைவு!

(கிளிநொச்சி)

ஜேர்மன் தமிழர் புனர்வாழ்வுக் கழக அனுசரணையுடன் சமூக மேம்பாட்டு நிறுவனம் நடாத்தும் சோழர் சிறுவர் ஊட்ட மேம்பாட்டுப் பூங்காவின் 10 ஆவது ஆண்டு விழாவும், பூங்காச் சிறார்களின் விளையாட்டு நிகழ்வும் கடந்த புதன் கிழமை கிளிநொச்சியில் சிறப்பாக நடைபெற்றன.

நிகழ்வில் தேசியக் கொடியைக் ஊரக வளர்ச்சித் திட்ட துணைப் பொறுப்பாளர் விபுலன் ஏற்றிவைத்தார். மங்கல விளக்கினை விடுதலைப் புலிகளின் நடமாடும் மருத்துவ சேவைப் பொறுப்பாளர் தேவா அன்ரி, சிவகுருநாதக் குருக்கள் ஆகியோர் ஏற்றிவைத்தனர்.

விளையாட்டு நிகழ்விற்கான ஒலிம்பிக் தீபத்தை தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தைச் சேர்ந்த வேலணையூர் சுரேஸ் ஏற்றி, போட்டிகளை ஆரம்பித்துவைத்தார்.

ஆசியுரைகளைத் தமிழர் புனர்வாழ்வுக் கழகத் திட்டப் பணிப்பாளர் லோறன்ஸ் கிறிஸ்ரி, மருத்துவர் தேவா அன்ரி ஆகியோர் நிகழ்த்தினர.

10 ஆவது ஆண்டு நிறைவுமலர வெளியீட்டு நிகழ்வும் இடம்பெற்றது. தொடர்ந்து பூங்காச் சிறுவர்கள் அனைவரும் சிறப்புப் பரிசில்கள் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர்.

கடந்த காலங்களில் நிலவிய போர் - பொருளாதாரத்தடை, வறுமை என்பவற்றால் மக்கள் வாழ்நிலை மிக மோசமாகப் பின்தள்ளப்பட்டது. இதன் காரணமாக - குழந்தைகள் போஷாக்கற்ற நிலையில் சாவின் விளிம்பில் தவித்தனர்.

இந்த அவலங்களிலிருந்து மக்களையும், வருங்காலச் செல்வங்களான சிறார்களையும் மீட்டு - ஊட்டச்சத்து உணவு, கல்வி, கலை என்பனவற்றை வழங்கி நல்ல ஆரோக்கியமான சமுதாயத்தை உருவாக்க வேண்டுமென்ற உயர்ந்த எண்ணத்துடன், தமிழர் புனர்வாழ்வுக் கழகம் பிரதேசரீதியாகப் பூங்காக்களை நிறுவிச் செயற்படுத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

1993 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட சோழர் பூங்காவில் இற்றைவரை 1400 இற்கு மேற்பட்ட சிறார்கள் பயன்பெற்றுச் சிறந்த ஆரோக்கியத்துடன் வெளியேறியுள்ளதுடன், தற்சமயம் 135 சிறார்கள் பயனடைந்து வருகின்றமையும், ஜேர்மன் தமிழர் புனர்வாழ்வுக் கழகம் இப்பூங்காச் சிறார்களுக்கு பேராதரவு நல்கிவருவதும் குறிப்பிடத்தக்கது.

## சின்னஞ்சிறு செய்திகள்

### நெடுந்தீவில் விளையாட்டு விழா

(நெடுந்தீவு)

நெடுந்தீவு பிரதேச விளையாட்டுக் கழகங்களுக்கிடையிலான விளையாட்டு விழா நாளை மறுநாள் ஆரம்பமாகவுள்ளது.

இவ்விளையாட்டு விழாவில் பாரம்பரிய விளையாட்டுக்கான கிளித்தட்டு, மரதன், சைக்கிள் ஓட்டம், கயிறிழுத்தல், நீச்சல், படகோட்டம் குதிரையோட்டம், வண்டிச்சவாரி, முடடியுடைத்தல் போன்றனவும் துடுப்பாட்டம், உதைபந்தாட்டம், கரப்பந்தாட்டம், வலைப்பந்தாட்டம், எல்லே, கபடி என்பனவும் 60 வயதுக்கு மேற்பட்டோருக்கான ஓட்டப்போட்டிகளும் நடைபெறவுள்ளன. (113)

### நூல் வெளியீடு

யாழ்.பல்கலைக்கழக தமிழ் மன்றம் நடத்தும் வாசுகி சொக்கலிங்கத்தின் 'மருதத்திணை' நூல்வெளியீட்டு விழா நாளைமறுநாள் பி.ப. 3 மணிக்கு பல்கலைக்கழகக் கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

தமிழ் மன்றத் தலைவர் ந.சத்திய வேந்தன் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் வாழ்த்துரையைத் துணைவேந்தர் பேராசிரியர் க.மோகனதாஸம், அறிமுகவுரையை கலாநிதி சி.சிவலிங்கராசாவும், வெளியீட்டுரையைப் பேராசிரியர் அ.சண்முகதாஸும் நிகழ்த்துவர்.

# பத்திரிகை படிக்கச் சென்றவரை குளவிகள் விரட்டிக் கொட்டின

பத்திரிகை படிப்பதற்காக நூலகத்திற்குச் சென்று வாங்கில் அமர்ந்தவர் குளவிகளால் கொட்டப்பட்டதில் காயமடைந்த சம்பவம் சுன்னாகம் கொத்தியாவத்தைப் பகுதியில் இடம்பெற்றது.

சுன்னாகம் கந்தரோடை வீதியில் உள்ள ஐயன்னா சனசமூக நிலையத்தில் பத்திரிகை படிப்பதற்காகச் சென்று வாங்கில் அமர்ந்தவரை, வாங்கின்கீழ் பெரிய கூடுகட்டியிருந்த குளவிகள் கலைத்துக் கலைத்துக் கொட்டின.

இதனால் முகம் மற்றும் கை, கால் பகுதியில் காயமடைந்த அளவெட்டி செபஸ்தியார் கோவிலடியைச் சேர்ந்த கி.விக்ரர் (வயது 17) என்பவர் அருகிலிருந்த வைத்தியசாலையில் சிகிக்சைக்காக அனுமதிக்கப்பட்டார்.

மேற்படி சம்பவம் இடம்பெற்ற சனசமூக நிலையக் கட்டடத்தில் பாலர் பாடசாலையும் இயங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (101)

# சுன்னாகம் பஸ்நிலைய முன்வாயிலில் கிடங்கு!

சுன்னாகம் மத்திய சந்தைக்கு அருகில் அமைந்துள்ள பிரதான பஸ்தரிப்பிடத்தில் பஸ்கள் வந்து திரும்பும் நுழைவாயிலில் பாரிய கிடங்கு காணப்படுகின்றது.

தினமும் நூற்றுக்கும் குறையாத பஸ்கள் வந்து செல்லும் பாதையில் இக்கிடங்கு திருத்தப்படாது இருப்பதால், மக்கள் நடமாட்டம் அதிகமுள்ள பாதை ஒடுக்கமாக இருப்பதால், சாரதிகள் மிகவும் சிரமப்பட்டே பஸ்களைத் திருப்பவேண்டியுள்ளது. இதனால், விபத்துக்கள் ஏற்படுவது வழமையாகியுள்ளது. இக்கிடங்கை நிரப்புவதற்குப் பிரதேசசபை உப அலுவலகமோ அல்லது வடபிராந்திய போக்குவரத்துச் சபையோ இன்றுவரை எவ்வித நடவடிக்கையும் எடுக்காததையிட்டு பிரயாணிகள் மிகுந்த வருத்தம் தெரிவித்துள்ளனர்.

# ரொரான்ரோ நகரில் பரவும் 'சார்ஸ்' நோயினால் பீதி!

## பாதிப்புற்றோரின் தொகை திடீரென உயர்வு




கனடா - ரொரான்ரோ நகரில், மீண்டும் 'சார்ஸ்' நோயின தாக்கம் தீவிரமடைந்துள்ளது. நகரில் இந்நோயினால் பாதிக்கப்பட்டோர் தொகை 12 இலிருந்து திடீரென 33 ஆக உயர்ந்துள்ளது.

ரொரான்ரோ நகரில் 29 பேர் 'சார்ஸ்' நோயினால் இறந்துள்ளதையடுத்து, ஆசியாவுக்கு வெளியே 'சார்ஸ்' நோயால் பாதிக்கப்பட்ட நாடாக கனடா மாறியுள்ளது. இதனால், ரொரான்ரோ மக்களிடையே ஒருவித பீதிநிலை ஏற்பட்டுள்ளது.

கனடாவில் 'சார்ஸ்' கட்டுப்படுத்தப்பட்டுவிட்டதாக, அந்நாட்டுப் பிரதமர் அறிவித்து ஒரு சில மணி நேரத்தில் இரு கனேடியர்கள் சார்ஸினால் இறந்தனர்.

இறந்த இருவரும் 60 வயதுக்கு மேற்பட்ட கனேடியப் பெண்களாவர். ரொரன்ரோ பாடசாலை ஒன்றில் 'சார்ஸ்' நோய் அறிகுறியுடன் ஒரு மாணவன் காணப்பட்டதைத் தொடர்ந்து, அப்பாடசாலை உடனடியாக மூடப்பட்டு - ஆசிரியர்களும், மாணவர்களும் பரிசோதிக்கப்பட்டனர்.

ரொரான்ரோவில் 'சார்ஸ்' நோயாளிகளின் தொகை எழுபதை எட்டலாம் என, சுகாதாரப் பாதுகாப்பு அதிகாரி டாக்டர் யங் கூறுகிறார்.

## தலையில் ஒட்டிப் பிறந்த ஈரான் நாட்டு இரட்டையர் சத்திரசிகிச்சைக்குள்ளாவர்



பல வருடகாலமாக, தலைகள் ஒட்டிப்பிறந்த நிலையில் வாழ்ந்த ஈரானிய யுவதிகள், அறுவைச் சிகிச்சை மூலம் தனித்தனியாகப் பிரிக்கப்படவுள்ளனர்.

இத்தகைய அறுவை சிகிச்சையை 1996 இல் இவர்கள் மேற்கொள்ள முயன்றபோது, அறுவைச் சிகிச்சை மேற்கொண்டால் இருவருக்குமே உயிராபத்து ஏற்படும் என, ஜேர்மனிய வைத்தியர்கள் எச்சரித்திருந்தனர்.

எனினும், தற்போது அறுவைச் சிகிச்சையை, அடுத்த வாரத்தில் மேற்கொள்ள, சிங்கப்பூரில் உள்ள ர.்.பல்ஸ் வைத்தியசாலை இருதய நிபுணர்கள் முன்வந்துள்ளனர்.

நாம் இருவரும் தனித்தனிப் பிறவிகள். தனித்தனிக் கொள்கைகள் கொண்டவர்கள். எனவே, பிரிவது எமக்கு நல்லதே என்கின்றனர் இந்த ஈரானிய இரட்டையர்கள். ஜேர்மன் வைத்தியர்கள் மறுத்ததால், நாம் சிகிச்சைக்காக சிங்கப்பூர் சென்றுள்ளோம் என, இவர்கள் கூறுகின்றனர்.



போலந்துக்கு வருகைதரும் அமெரிக்க ஜனாதிபதி புஷ்ஷுக்கு எதிரான ஆர்ப்பாட்டத்தில் - போலந்துப் பெண்ணொருவர்.

## ஈராக்கில் போர் முடியவில்லை என்கிறார் அமெ. படைத் தளபதி



டேவிட் மக்கேய்ரன்

(பக்தாத்)

ஈராக்கில் போர் இன்னும் முடியவில்லை. கலைக்கப்பட்ட சதாமின் ஆட்சியுடன் இன்னமும் போரிட்டபடிதான் உள்ளோம்' - என ஈராக்கிலுள்ள அமெரிக்கப் படைகளின் தளபதி லெப். ஜெனரல் டேவிட் மக்கேய்ரன் தெரிவித்தார். ஈராக்கில் மேலதிகப் படைகளை நிறுத்த வேணடியுள்ளதாகவும் அவர் கூறினார்.

'எதிர்காலமே இல்லாத சதாமின் காட்டுமிராண்டிக் கூட்டம், தினமும் அங்கு அமெரிக்கப் படைகளைத் தாக்குகின்றது. போர் இன்னமும் நடக்கிறது' என ஜெனரல் மக்கேய்ரன் குறிப்பிட்டார்.

இதேவேளை - ஈராக் சென்ற பிரிட்டிஷ் பிரதமர் பிளேயர், பஸ்ராவில் தனது படையினர் மத்தியில் பேசியபோது, நாம் பலமான மறக்க முடியாத பணியினை ஈராக்கை மீட்டதன் மூலம் செய்துள்ளோம் எனக் குறிப்பிட்டார்.

## பணநோட்டு அடிப்பதில் சிம்பாப்வே மும்முரம்




சிம்பாப்வேயில் ஏற்பட்டுள்ள பணநோட்டுத் தட்டுப்பாட்டையடுத்து, நாட்டின் பணநோட்டை அச்சுப்பதிவு செய்யும் நிறுவனம் இரவு பகலாக பணநோட்டு அடிக்கும் பணியை மேற்கொண்டு வருகிறது.

பண அச்சுப்பதிவுக்காக மேலதிக விசேட தாள்கள் வந்துசேர்ந்துள்ளதால், பொதுமக்கள் பீதி கொள்ளவேண்டியதில்லை என அந்நாட்டு மத்திய வங்கியின் ஆளுநர் தெரிவித்துள்ளார்.

கடந்த மாதம் நடைபெற்ற தேசிய வேலைநிறுத்தப் போராட்டத்தினால், நாட்டில் உள்ள வங்கிகளில் பெரும் பணநோட்டுத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

உலகவலம்

## நேபாள பிரதமர் பதவி துறந்தார்

நேபாளப் பிரதமர் லோகேந்திர பகதூர் சாண்ட், தனது பதவியை நேற்று இராஜினாமாச் செய்துள்ளதாக அரண்மனை வட்டாரங்கள் அறிவித்துள்ளன. 8 மாதங்களின் முன் - மன்னர் கஜேந்திரா, தனது அதிகாரத்தைப் பயன்படுத்தி தேர்தல் மூலம் தெரிவான பிரதமரைப் பதவிநீக்கிவிட்டு, சாண்ட்டை பிரதமராக நியமித்தார்.

இந்தப் பிரதமர் நியனமத்தை, எதிர்க்கட்சிகள் சட்டவிரோதம் என சாடிவந்தன. பிரதமரின் பதவிவிலகலால் - 7 வருட நேபாள சிவில் யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவருவதான சமாதானப் பேச்சுக்களில் பின்னடைவுகள் ஏற்படலாம் என நேபாள ம்ாவோ கிளர்ச்சியாளர்கள் தெரிவித்தனர்.

சாண்ட் - மன்னர் கஜேந்திராவின் கைப்பாவை ஆட்சியாளர் எனக் கருதப்பட்டு வந்தவராவார்.



## சென். பீட்டர்ஸ் போர்க்கில் குவியும் உலகத் தலைவர்கள்

ரஷ்யாவின் முன்னாள் தலைநகர் சென். பீட்டர்ஸ் பேக்கின் 300 ஆவது ஆண்டு நிறைவு விழாவில் கலந்து கொள்ள, 40 இற்கும் மேற்பட்ட உலக நாடுகளின் தலைவர்கள் அங்கு கூடவிருக்கின்றனர்.



தற்போதைய ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின் இந்நகரத்தில் பிறந்தவரே.

நிகழ்வுக்கு வரவிருக்கும் உலகத் தலைவர்களை புடினே, நேரில் பீட்டர்ஸ்பேர்க்கின் முக்கிய இடங்களுக்குக் கூட்டிச்சென்று காட்டவுள்ளார்.

சென். பீட்டர்ஸ்பேர்க் - பேரரசர் பீட்டரின் ஆட்சிக்காலத்தில் அழகிய அரண்மனைகளுக்கும், இயற்கைத் தோட்டங்களுக்கும், அருட்பொருட் காட்சியகங்களுக்கும் பெயர் பெற்றதாகும்.



ஈராக்கில் நடைபெற்ற பிரார்த்தனையில் - முழந்தாளிட்டு வணங்கும் பெண்களிடையே இச்சிறுவனும்.

## ஈராக்கியப் போரில் பிரிட்டிஷ் படையினர் போர்க் கைதிகளை வதைக்கும் புகைப்படங்கள் மீட்கப்பட்டன!

(லண்டன்)

ஈராக்கியப் போரின்போது, கைதான ஈராக்கிய்ப் படைகளை, பிரிட்டிஷ் படைகள் துன்புறுத்தும் காட்சிகளைப் படம்பிடித்த சில பிரிட்டிஷ் படையினர், கைதுசெய்யப்பட்டுள்ளதாக பிரிட்டிஷ் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

இப்படங்களில், ஈராக்கியர் கைகள் கட்டப்பட்டு இழுத்துச் செல்லப்படுவதும், ட்ரக் வண்டியில் வைத்து பிணைத்துச் செல்லப்படுவதுமான காட்சிகளும் காணப்படுகின்றன.

இது - போர்க் கைதிகள் தொடர்பான ஜெனீவா உடன்படிக்கையை மீறும் நடவடிக்கை என்பதால், இப்படங்களின் உண்மைத்தன்மை பற்றி இப்போது ஆராய்வதாக பிரிட்டிஷ் அதிகாரிகள் தெரிவித்தனர்.



நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# புலிகளின் வடமராட்சி...

இந்தச் சந்தர்ப்பத்தில், அங்கு வாகனங்களில் வந்திறங்கிய இராணுவத்தினரும், பொலிஸாரும் அலுவலகத்தின் முன் பிரசன்னமாகியிருப்பதை அவதானித்த பணியாளர்கள் - போர்நிறுத்தக் கண்காணிப்புப் பிரிவினரிடம் தெரிவித்தபோது, அவர்கள் - படையினரையும் பொலிஸாரையும் உள்ளே வருமாறு அழைத்தனர்.

அனுமதியற்ற முறையில் இராணுவத்தினரும், பொலிஸாரும் உள்ளே வருவது பொருத்தமற்றது எனக் கூறி, அங்கிருந்த பணியாளர்கள் படையினர் உள்ளே வருவதற்கு மறுப்புத் தெரிவித்தனர்.

இந்தச் சந்தர்ப்பத்தில், தகவல் அறிந்து வந்த, வடமராட்சி அரசியற்துறைப் பொறுப்பாளர் - பொலிஸாரும், இராணுவத்தினரும் அலுவலகத்திற்குள் நுழைவது பொருத்தமற்றது என்றும், சோதனையிடுவதாயின் போர்நிறுத்தக் கண்காணிப்புப் பிரிவின் பிரதிநிதியையும், அவருடைய உதவியாளரையும் மட்டுமே அனுமதிக்கலாம் எனவும் தெரிவித்தார்.

வழமையான ஒழுங்குமுறையின்படி, யாழ். மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளருக்கு தகவல் தெரிவித்து, அனுமதிப்பதுதான் முறையானது எனவும் அவர் தெரிவித்தார்.

போர்நிறுத்த உடன்படிக்கையின் பிரகாரமே தாம் செயற்படுவதாகவும், அவற்றினை மீறித் தாம் செயற்படுவதில்லை என்றும் சுட்டிக்காட்டியதுடன், எந்தவித சக்தி வாய்ந்த தொலைத்தொடர்புக் கருவிகளும் தம்மிடம் இல்லை என்றும், முகமாலைச் சோதனைச் சாவடி ஊடாகப் பதிவுசெய்யப்பட்டு, எடுத்துவரப்பட்ட தொலைத்தொடர்புக் கருவிகளே தம்மிடம் இருப்பதாகவும் அவரால் சுட்டிக்காட்டப்பட்டது.

அதேசமயம், அங்கு வந்த இராணுவத்தினர் - போர்நிறுத்தக் கண்காணிப்புப் பிரிவினரின் அழைப்பின் பேரிலேயே தாம் வந்ததாகத் தெரிவித்தனர்.

ஆனால், இராணுவத்தினரைத் தாம் அழைக்கவில்லை. அவர்கள் தாமாகவே வந்ததாக - ஏற்கனவே விடுதலைப் புலிகளிடம் கண்காணிப்புக் குழுவினர் தெரிவித்திருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை - இவ்விடயம் குறித்து, உடனடியாக யாழ். மாவட்ட அரசியற்துறை அலுவலகத்திற்கு அறிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து, யாழ். மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் - போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவுக்கு தமது கணடனத்தைத் தெரிவித்துக்கொண்டார்.

இவ்வாறு முன்னுக்குப்பின் முரணான கருத்தையும், தம்மீது அபாணடமான குற்றத்தினையும் சுமத்தியது, திட்டமிட்ட செயலென அவர் கண்டித்துள்ளார்.

போர்நிறுத்தக் கண்காணிப்புப் பிரிவினரின் தவறான அணுகுமுறையையும், பக்கச் சார்பாக நடந்துகொள்கின்ற தன்மையையும் அவர் சாடியுள்ளார்.

(09,13)

**புதிய திராட்சை ரச அறுவடை திருச்சபை**

*"கர்த்தருடைய சத்தம் நகரத்தை நோக்கிக் கூப்பிடுகிறது"*
*(மீகா: 6:9)*

**செய்தி வழங்குபவர்:- பாஸ்ரர் யோசேப் ஜெயராஜ்.**

வேதாகம சத்தியங்களை அறிவதற்கும், வசன வெளிப்பாடுகளைப் பெற்றுக்கொள்வதற்கும் அன்புடன் அழைக்கின்றோம்.

**இடம்:- 136, புகையிரத நிலைய வீதி, யாழ்ப்பாணம்.**

**காலம்:- 01.06.03 (ஞாயிறு).**

**நேரம்:- காலை 9.30 - 1.00.**

(சி/960) *புதிய திராட்சை ரச அறுவடை திருச்சபை.*

உ

**க[illegible]தரிசனம்**

**நூல் வெளியீட்டு விழாவும்,**

**நூலகத் திறப்பு விழாவும்**

# அரசின் புதிய யோசனையை...

**அதிகாரமுள்ள இடைக்கால நிர்வாகமே வேண்டப்பட்டது**

நோர்வே வெளியுறவு அமைச்சர் ஜான் பீற்றர்ஸனுடனான சந்திப்பில் பிரபாகரன் - தமிழர் தாயகத்தில் போரினால் சிதைவடைந்த பொருளாதாரத்தைக் கட்டியெழுப்பவும், வழமை நிலையைக் மீளக்கொண்டுவரவும் - விடுதலைப் புலிகளின் அதிக பங்களிப்பைக் கொண்ட, சட்டவலுவுள்ள, அதிகாரம்கொண்ட இடைக்கால நிர்வாக அலகு ஒன்றை உருவாக்குவது தொடர்பான ஆலோசனையைத் தெரிவித்திருந்தார். ஆனால், உங்களால் முன்வைக்கப்பட்ட இடைக்கால யோசனையில் - விரிவான அதிகாரமோ, செயற்பாடோ எமக்குத் தரப்படவில்லை என்பதை நீங்கள் அவதானித்திருப்பீர்கள். வடக்கு-கிழக்கில் இடைக்கால நிர்வாகம் அமைப்பதற்கான முழுமையான ஆணையை, கடந்த பொதுத் தேர்தலில் சிங்கள மக்களிடையே பெற்ற உங்கள் அரசு - துணிவுடன் செயற்பட்டு, எமது மக்களின் அபிலாஷைகளைப் பூர்த்திசெய்யும் என நாம் நம்பியிருந்தோம்.

**எமது கோரிக்கைக்கு இரண்டு காரணங்கள்**

முன்னர் கூறியதுபோல, எமது தலைமை - இடைக்கால நிர்வாகம் தொடர்பான கோரிக்கையை முன்வைத்தமைக்கு இரண்டு காரணங்கள் உண்டு.

முதலாவது, கொழும்பில் தற்போதுள்ள உறுதியற்ற அரசியல் நிலைமையின் கீழ் தமிழர்களுக்கான - பிராந்திய சுயாதிபத்தியம், சுயாட்சி என்பன நிரந்தர அரசியல் தீர்வாக முன்வைக்கப்படமாட்டாது என நாம் உணர்ந்துள்ளோம்.

இரண்டாவது, பேச்சுவார்த்தை மேசையில் இணக்கம் காணப்பட்டு உருவாக்கப்பட்ட அமைப்புகள், இடம்பெயர்ந்த மக்களின் உடனடிப் பிரச்சினைகளைத் தீர்க்கத் தவறிவிட்டன.

சமாதானப் பேச்சுக்கள் மூலம், நாம் தீர்வைக்காண எம்மை முழுமையாக அர்ப்பணித்திருந்ததை நீங்கள் அறிந்திருப்பீர்கள். இலங்கைப் படைகள் தமது போரிடும் வலுவை மோசமாக இழந்துள்ள வேளையிலும், போரினால் இலங்கையின் பொருளாதாரம் மிகமோசமான நிலையில் இருந்த வேளையிலும் - நாம் ஒருதலைப்பட்சமாக அன்று யுத்த நிறுத்தத்தை அறிவித்திருந்தோம். சமாதானப் பேச்சுக்களின்போதும், நாம் நெகிழ்வுப் போக்கைக் காட்டினோம். அடிமட்ட ஆதரவைக்கூட இழந்துவிடும் ஆபத்தானநிலை இருந்தும்கூட, எம்மாலியன்றளவுக்கு சமாதான முயற்சி முன்னேறுவதற்காக ஆதரவளித்தோம். ஆனால், சமாதான உருவாக்கலிலும், விட்டுக்கொடுப்புத்தன்மையிலும், நாம் மிகப் பெரிய பேரிடியை - உலக மற்றும் பிராந்திய நாடுகள் எம்மை தீவிரவாதிகள் என்ற கண்ணோட்டத்தில் பார்த்தபோதும், சர்வதேச மன்றங்களில் கலந்துகொள்ளமுடியால் செய்தபோதும் சந்தித்தோம். எமது மக்கள் தமது அரசியல் மற்றும் கௌரவத்தைப் பேணுவதற்குத் தடையாகவும், அழுத்தமாகவும் - சர்வதேச அமைப்புகள் நிதியுதவியை மட்டு

**அரசியல் அமைப்புக்குள் ஒளிகிறது அரசு**

தமிழர்களுக்கான இடைக்காலத் தீர்வைக்கூட நிராகரிக்க, நீங்கள் தற்போதுள்ள அரசியலமைப்பிற்குள் தஞ்சம்புகுவது போலவே எமக்குப் படுகின்றது. அரசு, நாட்டின் சட்டத்திற்குட்பட்ட வகையிலேயே நடக்க முடியும் என நீங்கள் கூறியுள்ளீர்கள். இதனால், எந்த முன்னேற்ற நடவடிக்கையும் ஏற்படாது. அரசியலமைப்புக்கும், பழிவாங்குவதற்காகக் காத்திருக்கும் ஜனாதிபதிக்கும் இடையில் உங்கள் அரசு சிக்கியிருப்பதை நாம் நன்றாகவே அறிந்துள்ளோம். அரசியல் முறைமையும், உங்கள் நிர்வாகக் கட்டமைப்பும் சக்தியற்றதாக இருந்ததால், இனப் பிரச்சினைக்கு - இடைக்காலத் தீர்வையோ, நிரந்தரத் தீர்வையோ காண்பது கடினம் என்பதை நீங்கள் ஏற்றுக்கொள்கிறீர்கள். உங்கள் அரசு - சட்டத்தின் பாதுகாப்பையும், அரசியலமைப்பு தடைகளையும் தாண்டிவரும் என, எவ்வளவு காலத்திற்கு எமது மக்கள் தமது கஷ்டங்களை மறந்து இருப்பது? எமது மக்களுக்கு அரசியல் உரிமை வழங்குவது தொடர்பாக, சிங்கள அரசியல் பிரிவுகள் தமக்குள் முட்டி மோதுவதை தமிழ்மக்கள் அரை நூற்றாண்டுகளாகப் பார்த்துள்ளனர்.

**எம் மக்களின் நல்வாழ்வே எமக்கு முக்கியமானது**

'விடுதலை இயக்கம்' என்ற வகையில், தியாகங்களூடாக இரண்டரை தசாப்தங்களாக - சுதந்திரப் போராட்டத்தை நடத்திய எமக்கு, எமது மக்களின் நல்வாழ்வு முக்கியமானது. எமது மக்கள் அனுபவிக்கும் இன்னல்களுக்கு மத்தியில், சமாதான முயற்சியில் ஈடுபட்ட நாம், எந்த முன்னேற்றத்தையும் காணவில்லையென்றால், எங்களது நிலை எப்படியிருக்கும் என்பதை நீங்கள் புரிந்துகொள்ளவேண்டும். எந்தப் பலனையும் நாம் அடையாவிட்டால், எம்மக்கள், எம்மீது நம்பிக்கையிழந்துவிடுவர். அரசின் நிர்வாக முறையினால் - திட்டங்களை நடைமுறைப்படுத்த தடைகள் ஏற்படுவதாலேயே, நாம் புதிய ஒரு நிர்வாகக் கட்டமைப்பை, புலிகளின் அதிக பங்களிப்புடன் - கேட்டோம். சட்ட மற்றும் யாப்புத் தடைகளைத் தாண்டி, உங்கள் அரசு இதற்கு ஆவன செய்யும் என நம்பினோம். ஆனால், புனர்வாழ்வு மற்றும் அபிவிருத்திக்கு, மத்திய அரசின் அதிக பங்களிப்புடனான திட்டத்தை நீங்கள் முன்வைத்துள்ளதால் - எமக்கு திகைப்பு ஏற்பட்டது.

உங்கள் ஆலோசனையிலுள்ள ஒவ்வொரு விடயங்களுக்கும், விரிவான ஆய்வுகளைத்தர நாம் விரும்பவில்லை. புதிய கட்டமைப்பில் உள்ள சில முக்கிய விடயங்கள் தொடர்பாகவே, நாம் எமது கண்டனங்களை முன்வைக்கின்றோம்.

**மூன்று மட்டங்களில் அரசின் யோசனை**

யோசனையில் மூன்று மட்டங்கள் குறிப்பிடப்பட்டுள்ளது. உயர்நிலையில் ஓர் ஆலோசனைசபை ஒன்றுள்ளது. புனரமைப்பு, அபிவிருத்தி வேலைக்கான கொள்கை, ஆலோசனை மற்றும் மீள்பரிசீலிப்புப்

கேற்பர் எனக் கூறுகின்ற
குழுவின் உண்மையான
கள் யார் என்பதை, அர
தெளிவாக எதுவும் குறிப்பி

இதன்படி - விடுதலை
எல்லாத - தமிழ், முஸ்லிம்
பிரதிநிதிகளையே அரசு மு
தாகக் கருதவேண்டியுள்ளது
சனைச்சபையில் விடுதலை
களின் பங்களிப்பை தெ
வரையறை செய்யாமையே
திட்டத்தின் முழுமையான
விக்குக் காரணமாகிறது.

முன்வைக்கப்பட்ட அ
திக் கட்டமைப்பில், பிரதம
மிக்கப்படும் விசேட ஆலை
என்னும் பதவி, இக்கட்டம
சகல பணிகளையும் கட்டு
கையாளக்கூடிய ஒன்றாக உ
மற்றைய அதிகாரம்மிக்க
மைப்பாக இருப்பது நிர்வாக
வாகும். இதிலும், பிரதமரா
மிக்கப்படும் அரச பணியா
அங்கம் வகிப்பர். இவர்கள்
சனை சபையின் திட்டங்களை
வாக அமுல்படுத்துவதிலும்,
பதிலும் முக்கிய பணியாற்

**புலிகளிடமுள்ள நிர்வாகக் கட்டமைப் மறுக்கப்படுகிறது**

இவற்றில், எதிலும் விடுத
புலிகளின் முக்கிய பங்கள
பற்றி எதுவும் கூறப்படவி
தனியே குறைந்த மட்டத்தி
அபிவிருத்தி ச்பைகளிலும்,
கிழக்கு புனரமைப்பு நிதியத்
பங்குபற்ற வாய்ப்பளிக்கப்பட
என்பதை தங்களுக்குச் சுட்டி
விரும்புகின்றோம். இடைக்கா
வாகத்தில் புலிகளின் முழு
ளிப்பை நிராகரித்துள்ள உ
ஆலோசனையில், வடக்கு -
நிர்வாகத்தின் முழுப்பொ
மாகாணசபைக்கும், மத்
குமே உண்டு எனக்கு
டுள்ளது. இந்த வகையி
கிழக்கின் பெரும்பாலா
ளில் விடுதலைப் புலிகள்
சட்டபூர்வமற்ற - ஆனால்,
மான நிர்வாகக் கட்டமை
கள் மறுத்துள்ளீர்கள்.

புனர்வாழ்வு மற்றும் அ
திப் பணிக்காக, நாம் பல
ளில் நிர்வாகக் கட்டமை
கொண்டுள்ளோம் என்பதை
கள். முன்வைக்கப்பட்டுள்ள
புனர்வாழ்வு மற்றும் அபிவி
காக கட்டமைப்பு, புதிய
சனை நிர்வாக சபையாகி
கத் தன்மையற்ற வங்குரோ
அரச நிறுவனங்களுடனும்,
முறைகளுடனும் இணைந்து உ
மனிதாபிமானப் பணிகளை
கொள்ளமுடியாத நிலைக்குச்
லும் என்றே நாம் கருதுகின்

எனவே - மேற்கூறிய கா
களினால் நீங்கள் முன்வை
புதிய ஆலோசனைகள் எம்மா
றுக்கொள்ளமுடியாதவை என,
அமைப்பின் தலைமை ம
தத்துடன் தங்களுக்கு அறிவ
கின்றது எனக் குறிப்பிடப்பட்டு

## மக்கள் எழுச்சிப்

கருத்துக்களைக்கூறும், அ
தமிழ்மக்கள் மீது கருத்துக்
திணிக்க முயலும் உலக
கள் உள்ளிட்ட சில சக்திக
தென்பகுதியிலுள்ள சிங்கள
தார்களுக்கும் - இம்மக்கள்

# க...தரிசனம்

# நூல் வெளியீட்டு விழாவும், நூலகத் திறப்பு விழாவும்

காலம்:- 01.06.2003 (ஞாயிறு காலை 10.00 புதிய நேரம்)
இடம்:- புதிய உயர் கல்லூரி மண்டபம்.
தலைவர்:- செல்வன் K.றஜீபன்

பிரதம விருந்தினர்:- **பேராசிரியர் S.மோகனதாஸ்**
*(துணைவேந்தர், யாழ்.பல்கலைக்கழகம்)*

கௌரவ விருந்தினர்:- **பேராசிரியர் P.பாலசுந்தரம்பிள்ளை**
*(தலைவர், புவியியற்துறை, யாழ்.பல்கலைக்கழகம்)*
**திருமதி இராஜலட்சுமி பாலசுந்தரம்பிள்ளை**

சிறப்பு விருந்தினர்:- **திரு.T.விக்னராஜா**
*(மாவட்ட நீதிபதி, யாழ்ப்பாணம்)*
**திருமதி S.நாச்சியார்**
*(பதில் தலைவர், இந்துநாகரீகம், யாழ்.பல்கலைக்கழகம்)*
**திரு.இரா.வை.கனகரட்ணம்**
*(தமிழ்த்துறை, பேராதனை)*

வெளியீட்டுரை:- **கலாநிதி S.திருநாவுக்கரசு**
*(விரிவுரையாளர், ஆசிரியர் கலாசாலை)*

ஆய்வுரை:- **கலாநிதி K.விசாகரூபன்**
*(தமிழ்த்துறை, யாழ்.பல்கலைக்கழகம்)*

## அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*- நன்றி -*

**யாழ்ப்பாணம், பேராதனை பல்கலைக்[illegible]ரின் வெளிவாரிப் பட்டப்படிப்பு மாணவர் ஒன்றி[illegible]**

**புதிய உயர் கல்[illegible]ரி.**

(360)


...பிராந்திய நாடுகள் எம்மை தீவிரவாதிகள் என்ற கண்ணோட்டத்தில் பார்த்தபோதும், சர்வதேச மன்றங்களில் கலந்துகொள்ளமுடியால் செய்தபோதும் சந்தித்தோம். எமது மக்கள் தமது அரசியல் மற்றும் கௌரவத்தைப் பேணுவதற்குத் தடையாகவும், அழுத்தமாகவும் - சர்வதேச அமைப்புகள் நிதியுதவியை மட்டுமல்ல, பாரிய பாதுகாப்பு வலையையும் போட்டுள்ளன. சர்வதேச அரசுகள், இத்தகைய விடுதலைப் புலிகளுடனான கடும்போக்கை வெளிப்படுத்துவது, இலங்கையின் சமாதானத்தையும் இனநல்லுறவையும் முன்னேற்றும் முயற்சிகளுக்கு எதிர்மறையான விளைவுகளையே ஏற்படுத்தும்.

**அரசின் யோசனைகளில் முக்கிய விடயங்கள் எதுவுமில்லை**

நீங்கள் முன்வைத்த ஆலோசனைகளை ஆராயும்போது, நாம் வியப்படைந்தோம். அதேசமயம், விடுதலைப் புலிகளின் தலைமையினால் முன்வைக்கப்பட்ட வட - கிழக்கிற்கான இடைககால நிர்வாக அமைப்புத் தொடர்பான, முக்கியமான விடயங்கள் எதுவும் உங்கள் அரசின் யோசனைகளில் காணப்படவில்லை. மிகவும் குறைந்த நிர்வாக அதிகாரமுள்ள, அபிவிருத்தி தொடர்பான கட்டமைப்பிலும்கூட, விடுதலைப் புலிகளின் பங்களிப்புத் தெளிவாக வரையறுக்கப்படவில்லை. ஊகங்களுடன் அது விடப்பட்டிருக்கின்றது. கேட்டதும் வழங்கப்பட்டதும் வெவ்வேறு விடயங்களாக இருக்கின்றன. உங்களது நிலைப்பாட்டிற்கான எந்த விளக்கமும் இல்லாமல், நிர்வாகக் கட்டமைப்புத் தொடர்பான எமது யோசனைகளை நீங்கள் நிராகரித்துள்ளீர்கள்.

...ணங்களை முன்வைக்கின்றோம்.

**மூன்று மட்டங்களில் அரசின் யோசனை**

யோசனையில் மூன்று மட்டங்கள் குறிப்பிடப்பட்டுள்ளது. உயர்நிலையில் ஓர் ஆலோசனைசபை ஒன்றுள்ளது. புனரமைப்பு, அபிவிருத்தி வேலைக்கான கொள்கை, ஆலோசனை மற்றும் மீள்பரிசீலிப்புப் பணியை இது மேற்கொள்ளும்.

மத்திய மட்டத்தில் நிர்வாகக் குழு - ஆலோசனைக் குழுவை அரச நிறுவனத்துடன் இணைத்து, நடவடிக்கைகளைத் துரிதப்படுத்தும் அமைப்பாக இருக்கும். இதன் தலைவராக ஒருவரும், அவரின் கீழ் ஒரு செயலாளரும் இருப்பர்.

திட்டங்களை அமுலாக்கும் சபை கீழ் மட்டத்திலுள்ளது. இதில் - அரச, அரச சார்பற்ற அமைப்புக்கள், திணைக்களங்கள் இருக்கும். இந்த கட்டமைப்பின் பிரதான நோக்கம், வடக்கில் புனர்வாழ்வு மற்றும் அபிவிருத்திப் பணிகளை அமுல்செய்வதாகும். இதுவே புதிய கட்டமைப்பின் சாரமாகும். இதன் அதிகாரங்கள், பணிகள் அதில் புலிகளின் பங்களிப்பு என்பவற்றை நோக்குவோம்.

**அதிகாரங்கள், பணிகளில் புலிகளுக்குள்ள அதிருப்தி**

ஆலோசனைச்சபையானது, எந்த நிர்வாக சக்தியையும் கொண்டிராத - ஆனால், ஓர் ஆலோசனை வழங்கும் சபையாகவே இருக்கும். ஆச்சரியம் தரும் வகையில் இந்த முடிவெடுக்கும் சபையில், விடுதலைப் புலிகளின் பங்களிப்பு குறித்து எதுவும் தெரிவிக்கப்படவில்லை. யோசனையின் இரண்டாவது பத்தியின்படி, வடக்கு - கிழக்கு இன விகிதாசார பரம்பலுக்கு ஏற்றவகையில் உறுப்பினர்கள் இதில் பங்...

...கின்றது எனக் குறிப்பிடப்பட்டு...

## மக்கள் எழுச்சிப்...

கருத்துக்களைக்கூறும், அ...
தமிழ்மக்கள் மீது கருத்துக்...
திணிக்க முயலும் உலக வ...
கள் உள்ளிட்ட சில சக்திகளு...
தென்பகுதியிலுள்ள சிங்கள...
தரர்களுக்கும் - இம்மக்கள்...
யின் ஊடாக, தமிழ்மக்களின்...
மையான எண்ணங்களையும்...
பங்களையும் ஓரணியில் - ஓ...
லில் உரத்துச் சொல்வதன் ...
எமது ஒற்றுமையையும், ப...
யும் வெளிப்படுத்தி - எமது உ...
களையும், சுதந்திரத்தையும்...
றெடுப்போம். அதற்காக அ...
வோம் எனக் குறிப்பிடப்பட்டு...

## நோர்வே...

யாளருக்கு அளித்த பேட்டி...
றில் - "ஜனாதிபதி சந்திரி...
அறிக்கைகளை அவதானித்...
கிறோம். ஆனால், சமாதான ...
களை மேற்கொள்வது பிர...
அரசே. எனவே, அரசு தெ...
தனது நடவடிக்கைகளை ...
டுத்துச் செல்லலாம்" என்று இ...
நிலவரம் குறித்துக் கருத்து...
வித்தபோது குறிப்பிட்டார்.

அவரின் இக்கருத்துக்கே...
திபதி கண்டனம் தெரிவித்து...
தம் ஒன்றை அனுப்பிவைக்கவு...

## புதைத்த சிசுவி...

ஆழமான குழியில் புதை...
பட்டிருந்தமை அவதானிக்கப்ப...
மரணமடைந்த சிசுவின் த...
பொலிஸாரால் கைதுசெய்ய...
டுள்ளார். இன்று, இவர் சாவக...
நீதிமன்றத்தில் ஆஜர்ப்படுத்த...
வுள்ளார். (...

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் மு[illegible]மது ஈழநாடு அச்சகத்தில் 31.05.2003 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்...